₹100/-

2 - 12

ஞானகுரு

# மகிழ்ச்சி

டிசம்பர் 2023

எஸ்.கே.முருகன்




## மோட்சத்துக்கு போகும் வழி

தை 1 முதல்

ஞானகுரு பதிப்பகத்தில் இருந்து...

க்



புதிய புத்தகத்தின் சரியான தலைப்பை யூகித்து
98409 03586 எண்ணுக்கு வாட்ஸ் ஆப் செய்யுங்கள்

www.gyanaguru.com



ஆசிரியர் பக்கம்

# வீண் உழைப்பு என்று எதுவுமில்லை..!

ஒரு மழை நேரத்தில் மின்சார ரயில் சமோசா விற்பனையாளர் ஒரு சிறப்பான வாழ்க்கை பாடம் சொல்லிக்கொடுத்தார்.

“திடீர்னு மழை வந்திடுச்சே… உங்களுக்கு வியாபாரம் பாதிக்குமோ..?”

“மழை பெஞ்சா நிறைய பேருக்கு ஏதாச்சும் சாப்பிடத்தோணும், அதனால சீக்கிரம் விக்கிறதுக்கு வாய்ப்பு இருக்கு…”

“ஓ… இப்படி ஒரு விஷயம் இருக்குதா… அப்படின்னா மழை பெஞ்சா உங்களுக்கு லாபம்னு சொல்லுங்க…”

”அப்படியும் சொல்லிட முடியாது. மழை நேரத்துல சமோசா சீக்கிரம் நமத்துப் போயிடும், நிறைய பேர் தொட்டுப்பார்த்துட்டு வாங்காமப் போயிடலாம்..”

“நீங்களே இப்படியும் சொல்றீங்க, அப்படியும் சொல்றீங்க. அப்படின்னா எப்படி விற்கப்போறோம்னு தினமும் பயந்துக்கிட்டே இருப்பீங்களா..?”

“எப்படியும் சாகப் போறோம், அதுக்காக தினமும் பயப்பட முடியுமா… விற்க வந்தாச்சு, எப்படி வித்தாலும் ஒண்ணுதான்…” என்று வெள்ளந்தியாக சிரித்தார்.

எது நடந்தாலும் ஏற்றுக்கொள்ளும் மனநிலை வேண்டும் என்பதை எத்தனை சுருக்கமாகச் சொல்லிவிட்டார். எத்தனை ஞானிகளால் இந்த தத்துவத்தை இத்தனை எளிமையாக சொல்லித்தர முடியும்.

கொஞ்சம் ஊன்றிக் கவனித்தால் தங்கள் உழைப்பும் முயற்சிகளும் வீணாவதைக் கண்டு எந்த உயிரினமும் அலட்டிக்கொள்வதே இல்லை. லட்சக்கணக்கான விதைகள் கொடுத்தாலும், முளைக்காத விதைகளுக்காக மரங்கள் கவலைப்படுவதில்லை. அத்தனை பறவைகளுக்கும் காலை முதல் மாலை வரை அலைந்தாலும் உணவு கிடைப்பது நிச்சயமில்லை. கரையில் முட்டையிட்டுத் திரும்பும் ஆமைகளின் பெரும் பாலான முட்டைகள் திருடு போகின்றன. ஆமை குஞ்சுகளும் பறவைகளின் வேட்டைக்கு ஆளாகின்றன. தப்பிக்க முடியாத சந்ததிக்காக ஆமைகள் வேதனைப்படுவதில்லை.



மனிதர்கள் மட்டுமே தங்களுடைய ஒவ்வொரு செயலையும் வெற்றி, தோல்வி என்று பிரித்துப்பார்த்து இன்பமும் துன்பமும் அடைகிறார்கள். சீக்கிரம் செல்வதற்கு ஆசைப்பட்டு தவறான வழியை தேர்ந்தெடுத்து அவஸ்தைப்படுகிறீர்களா..? புதிய ரெசிபி சொதப்பி விட்டதா..? அலுவலக மீட்டிங்கில் அவமானமாகி விட்டதா..? குழந்தை ஆசைப்பட்டதை வாங்கித்தர முடியலையா..? ஆசையாக வளர்த்த செடி பட்டுப்போனதா..?

விடுங்க… பார்த்துக்கலாம்.

ஆசிரியர்

www.gyanaguru.com

# அழுது வாங்க முடியுமா உலகக் கோப்பை..?

## இந்திய வீரர்களுக்கு சியர்ஸ்

ஓர் உலகம், ஒரே மக்கள், ஒரே மொழி என்பதுதான் மனிதகுலத்தின் எதிர்காலம். இதற்காக உலக மக்கள் முழுமையாக ஒன்றுபடுவதற்கு கலை, இலக்கியம், சினிமா, காதல், சுற்றுலா, விளையாட்டு போன்றவை முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவற்றில் விளையாட்டு தனித்துவமானது. குழந்தைகள் முதல் முதியோர்கள் வரையிலும் அத்தனை பேரையும் ஆனந்தத்தில் ஆழ்த்தக்கூடியது. தங்கள் நாட்டு அணி, தனக்குப் பிடித்த வீரர் வெற்றிபெற வேண்டும் என்று எண்ணுவது மனிதர்களின் இயல்பு. அதேநேரம், யார் சிறப்பாக விளையாடுகிறார்களோ, அவர்களே வெற்றிக்குத் தகுதியானவர் என்பதை அங்கீகரிப்பதே நல்ல ரசிகர்களின் பண்பு.

விளையாட்டில் கிடைக்கும் தோல்விக்காக வருத்தப்படுவது, கோபப்படுவது, சந்தேகப்படுவது போன்றவை குறுகிய மனப்பான்மையை மட்டுமே கொண்டுவரும். எனவே, விளையாட்டில் வெற்றி பெறுவதைவிட பங்கேற்பதே மதிப்புக்குரியது என்று மாணவர்களுக்கு இளம் வயதிலே போதிக்கப்படுகிறது. ஆனால், இப்போது விளையாட்டு அரசியலாக்கப்படுவதால் வெற்றி, தோல்வியானது தேசத்தின் பெருமையாகவும் அவமானமாகவும் மதிப்பிடப்படுகிறது. இந்த நிலை மாற வேண்டும், விளையாட்டை ஒரு போட்டியாக பார்க்கவேண்டுமே தவிர ஒரு போர்க்களம் போன்று பார்க்கக்கூடாது என்பதுதான் விளையாட்டு நியதி.

**2023** ஒரு நாள் கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்ற ஆஸ்திரேலிய வீரர்களை ஞானகுரு கை தட்டி பாராட்டிவிட்டு தொலைக்காட்சியை அணைத்தார். அப்போது இந்திய அணியின் தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாமல் சுணங்கிய முகத்துடன் வந்துசேர்ந்த மகேந்திரன், ‘‘இப்படி ஆகுமென்று கனவிலும் நினைக்கவில்லை... வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கையில் இடி விழுந்துவிட்டது. நாடு முழுவதும் இந்தியர்கள் சோகத்தில் துடிக்கிறார்கள்...” என்று வருந்தினார்.

‘‘ஜக்கியின் டிப்ஸ் மற்றும் நேரடி ஆசிர்வாதம் கிடைத்தும் இந்தியா ஜெயிக்காதது வேதனைதான்...” என்று சிரிக்காமல் பேசினார் ஞானகுரு.

உடனே கோபத்துடன், ‘‘இதில் உங்க குறுக்குப்புத்தியைக் காட்டாதீர்கள். கிரிக்கெட் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? எல்லாமே தெரியும் என்பது போல் காட்டிக்கொள்ளாதீர்கள்...” என்றார்.

‘‘இதில் கோபப்படுவதற்கு என்ன இருக்கிறது. சிவபெருமானுக்கு ரொம்பவே நெருக்கமானவர் என்று ஜக்கியே தன்னை பற்றி சொல்லிக்



www.gyanaguru.com

www.gyanaguru.com

ஆஸ்திரேலிய அணியைவிட இந்திய அணியின் வீரர்களே தனித்தனியே திறமையானவர்கள். ஆனால், ஆஸ்திரேலிய வீரர்கள் ஒட்டுமொத்த அணியாக திறமைசாலிகள். ஃபீல்டிங் மூலமே 25 ரன்கள் வரையிலும் தடுத்து நிறுத்தினார்கள். ஆனால், நம் அணியினரின் கவனம் எல்லாமே கோப்பையின் மீது மட்டுமே இருந்தது.



கொள்கிறார். சிவபெருமான் கேட்டுக்கொண்டதால் காட்டை அழித்து வித்தியாசமான சிவபெருமான் உருவத்தை பிரதிஷ்டை செய்திருக்கிறார். சிவனுடன் அவ்வப்போது பேசுகிறார். மிகப்பெரும் ஆசிரமம் அமைத்து பணக்காரர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் ஆலோசனைகள் வழங்கும் ஜக்கியை, வாழும் கடவுளாகவே அவர்கள் பார்க்கிறார்கள். அவரளவுக்கு எனக்கு கிரிக்கெட் தெரியாமல் இருக்கலாம். ஆனால், உணவை விமர்சனம் செய்வதற்கு ருசிக்கும் திறன் இருப்பதே போதும். அதுபோல் முடிந்துபோன போட்டியின் தோல்வியை ஆராய்வதற்கு ஒரு சாதாரண ரசிகரின் கண்ணோட்டமே போதும். இந்த மேட்ச் தோற்றுப் போனதற்கு கோலியும் கே.எல்.ராகுலும்தான் முக்கிய காரணம்...” என்றார் ஞானகுரு.

## மந்திரச்சொல்

நிலைமை மாறினால்
மகிழ்ச்சியாக இருக்க முடியாது,
மகிழ்ச்சியாக இருந்தால்
நிலைமை மாறிவிடும்

‘’ஓரளவுக்கு இந்தியாவின் மானத்தைக் காப்பாற்றியவர்களை போய் குற்றம் சாட்டுகிறீர்களே... நீங்கள் ஜக்கி மீதும் மோடி மீதும் பழி போடாத வரையிலும் சந்தோஷம்தான்...”

‘’சேச்சே... ஜக்கி என்ன செய்வார். அவர் சிவபெருமானிடம் சொல்லி இந்தியாவை ஜெயிக்க வைப்பதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்திருப்பார். அதேபோல் ஆஸ்திரேலியர்கள் இயேசுவிடம் பிரார்த்தனை செய்திருப்பார்கள். இரண்டு சாமிகளுக்கும் நடந்த சண்டையில் இயேசு ஜெயித்திருப்பார். தியானத்தில் அமர்ந்து முக்காலத்தையும் உணர்ந்துகொள்ளும் ஜக்கி எப்படியோ இதை கவனிக்கத் தவறிவிட்டார். அதனால் அவர் மீது எந்த குற்றமும் இல்லை. அடேபோல் பிரதமர் நரேந்திர மோடி ஒரு விளம்பரப் பிரியர் என்பது எல்லோரும் அறிந்த செய்திதான். புகைப்படம் எடுக்கும் எல்லா இடங்களிலும் தான் இருக்கவேண்டும் என்று ஆசைப்படுபவர். அதனால்தான் சந்திரயான், கிரிக்கெட் இறுதிப் போட்டி போன்ற முக்கிய தருணங்களில் தன்னுடைய புகைப்படம் வெளிவர வேண்டும் என்று ஆசைப்படுகிறார். ஆனால், அவர் கலந்துகொள்ளும் எல்லாமே தோல்வியில் முடிவதற்கு அவர் என்ன செய்துவிட முடியும்..?”


**‘’எசகுபிசகாக பேச வேண்டாம், கோலி, ராகுல் மீதும் ஏன் பழி போடுகிறீர்கள் என்று மட்டும் சொல்லுங்கள்...?”**

“இந்த போட்டியில் முதல் மூன்று விக்கெட்டுகள் சீக்கிரமே விழுந்துவிட்டன. கில், ஜெய்ஸ்வால், ரோகித் ஆகியோர் சீக்கிரமாக அவுட் ஆகிவிட்டார்கள். ரோகித் மட்டும் அவரது பாணியில் அடித்துவிளையாடினார். இதையடுத்து கோலியும், கே.எல். ராகுலும் விக்கெட் விழாமல் சிறப்பாக தடுப்பாட்டம் விளையாடினார்கள். சில ஓவர்கள் வரையிலும் அவர்கள் தடுப்பாட்டம் ஆடியது சரியான செயலே. ஆனால், தொடர்ந்து அதே பாணியில் ஆடியதுதான் ஆட்டத்தை வேறு திசைக்கு எடுத்துச்சென்றுவிட்டது. இருவரும் நிலைத்து நின்ற பிறகாவது இருவரில் ஒருவர் வழக்கமான விளையாட்டை ஆடியிருக்க வேண்டும். அடித்து விளையாடத் தொடங்கியிருந்தால் விக்கெட் விழுந்திருக்கலாம் என்றாலும் இதைவிட அதிக ரன்கள் வந்திருக்கும். அதேநேரம், அடுத்து வந்த பேட்ஸ்மேன்களுக்கு அடித்து விளையாடுவதற்கான தைரியம் கிடைத்திருக்கும். அந்த நம்பிக்கையையும் தைரியத்தையும்தான் கோலியும் ராகுலும் உடைத்துவிட்டனர். மைதானமும் பந்து வீச்சும் பயங்கரமாக இருக்கிறது என்பதுபோல் விளையாடி அடுத்து வந்தவர்களுக்கும் அச்சத்தை உண்டாக்கிவிட்டனர்..”

**‘’ஓ... அடித்து விளையாடியிருந்தால் இந்தியா ஜெயித்திருக்குமா..?”**

‘’வெற்றி பெற வேண்டும் என்ற இந்திய வீரர்களின் பதட்டமே அவர்களை தோல்வியை நோக்கி இழுத்துச்சென்றது. கிரிக்கெட் என்பது ஒரு சாதாரண விளையாட்டு. இதனை ஒரு நாட்டின் மானப்பிரச்னை அல்லது ரசிகர்களின் ஏமாற்றம் என்றெல்லாம் பார்க்கத் தேவையில்லை. நாட்டின் பிரதமர் முன்பு தோல்வி அடைந்துவிடக் கூடாது என்ற நெருக்கடி இந்திய அணிக்கு இருந்தது. அதனாலே அத்தனை பேரும் பதட்டமானார்கள். இதுவரை பத்து மேட்ச்சில் ஜெயித்து கட்டி வைத்திருந்த நம்பிக்கை கோட்டை மூன்று விக்கெட் விழுந்ததுமே உடைந்துவிட்டது. ஆனால், இந்த அழுத்தம் எதுவுமே ஆஸ்திரேலிய அணியினருக்கு இல்லை. ஏற்கெனவே அவர்கள் இந்திய அணியிடம் தோற்றுப் போயிருக்கிறார்கள். ஆகவே, தோல்வி என்றாலும் வெற்றி என்றாலும் அவர்களுக்கு ஒன்றுதான். ஆகவே, அழுத்தமில்லாமல் களத்திற்கு வந்தார்கள். இந்தியா பதட்டத்துடன் ஆடுவதைக் கண்டுகொண்டு, அந்த பலவீனத்தின் மீது தாக்குதல் தொடுத்து அடித்து நொறுக்கிவிட்டார்கள். அதனால்தான், ஆஸ்திரேலியாவுடன் மல்லுக்கட்ட முடியாமல் சுருண்டு விட்டார்கள்...”





**‘’இந்தியா போராடவே இல்லை என்கிறீர்களா..?”**

‘’ஆம், சிறந்த பேட்ஸ்மேனான சூர்யகுமார் பேட்டிங் செய்வதையே மறந்தவர் போன்று மைதானத்தில் எப்படியெல்லாம் தடுமாறினார் என்பதை பார்த்திருப்பீர்கள். குறிப்பிட்ட ஷாட் அடிப்பது தவறிய பிறகும், மீண்டும் மீண்டும் அதே ஷாட் அடிக்க முயற்சிக்கும் மனநிலை ஒருவருக்கு வருகிறது என்றால், அத்தனை உச்சபட்ச குழப்பத்தில் இருந்தார் என்று அர்த்தம். வேறு மாதிரி பந்து அடிக்க முடியும் என்பதையே மறந்துவிட்டார். அப்படித்தான் ஒட்டுமொத்த இந்திய அணியும் குழப்பத்தில் சிக்கி வெற்றியை பறிகொடுத்துவிட்டது...”

**’’ஆஸ்திரேலியா வெற்றிக்குத் தகுதியான அணி என்கிறீர்கள்..?”**

‘’நிச்சயமாக இல்லை. ஆஸ்திரேலிய அணியைவிட இந்திய அணியின் வீரர்களே தனித்தனியே திறமையானவர்கள். ஆனால், ஆஸ்திரேலிய வீரர்கள் ஒட்டுமொத்த அணியாக திறமைசாலிகள். ஃபீல்டிங் மூலமே 25 ரன்கள் வரையிலும் தடுத்து நிறுத்தினார்கள். ஆனால், நம் அணியினரின் கவனம் எல்லாமே கோப்பையின் மீது மட்டுமே இருந்தது. அதனால் தோல்வி அடைவதற்கு பயந்தார்கள். அது தேவையே இல்லை. வெற்றி போலவே தோல்வியும் ஒரு நல்ல சுவை. அதனையும் அவ்வப்போது முத்தமிட வேண்டும். வெற்றியோ தோல்வியோ போராடுவதே முக்கியம் என்பதை நம் வீரர்கள் உணர வேண்டும்.

விளையாட்டில் தோற்றதற்கு அழுவதும் கண்ணீர் சிந்துவதும் இயலாமை. காரியம் சாதிக்க முடியாதவர்களே, இப்படி அழுதாவது ரசிகர்களிடம் நல்ல பெயர் வாங்க விரும்புவார்கள். இது ரசிகர்களை ஏமாற்றும் மாயவலை. தங்கள் அணியின் தோல்வியை தாங்கிக்கொள்ள முடியாத ஒருவர், நல்ல விளையாட்டு வீரனாக இருக்க முடியாது. தாங்கள் எங்கே தோல்வி அடைந்தோம் என்பதை அறிந்தவர், அதனை திருத்திக்கொள்ள நினைப்பாரே தவிர, அழுது சரிக்கட்ட விரும்ப மாட்டார்.

வெற்றிக்குப் பிறகு இரண்டு அணியின் வீரர்களும் மிகவும் சகஜமாக பழகி, பேசி அரங்கத்திலிருந்து வெளியேற வேண்டும். வெற்றி பெற்ற அணிக்கு இந்திய அணியின் அத்தனை வீரர்களும் அன்போடு வாழ்த்து கூறியிருக்க வேண்டும். ரசிகர்களையும் வாழ்த்துகூறச் செய்திருக்க வேண்டும். இதுதான் சரியான மனநிலை. இதனை வளர்த்துக்கொள்ளவில்லை என்றால், ஒவ்வொரு போட்டியிலும் அழுது கண்ணீர் சிந்திக்கொண்டே இருக்க வேண்டியதுதான். பாகிஸ்தானுடன் விளையாடிய நேரத்தில் சிறப்பான அணுகுமுறையைக் காட்டினார்கள். அந்த நாட்டு வீரர்களுடன் ஜாலியாக பழகியபடி தங்கள் திறமையைக் காட்டி ஜெயித்தார்கள். ஆனால், ஆஸ்திரேலியாவைக் கண்டு பயந்துவிட்டார்கள். இந்த மனநிலை மாற வேண்டும்.

எனவே, நம் வீரர்களின் கவனம் ஆட்டத்தின் மீது மட்டுமே இருக்க வேண்டும். ஸ்டேடியத்தில் குவிந்திருக்கும் ரசிகர்கள் மற்றும் வி.ஐ.பி.கள் குறித்து ஒருபோதும் கவலைப்பட அவசியம் இல்லை. அதேபோல் அரசியல்வாதிகளும் ஆன்மிகவாதிகளும் கிரிக்கெட்டில் இருந்து விலகி நிற்பதே விளையாட்டுக்கு நல்லது. தோல்வியிலும் சிரிப்பதற்கான மனநிலையுடன் வீரர்கள் இருந்தால் மட்டுமே, கோப்பை கைக்கு வரும்...” என்று சிரித்தார் ஞானகுரு.

அவரது சிரிப்பில் மகேந்திரனும் கலந்துகொண்டார்.

# அப்புறமா சாப்பிடுறேம்மா

## வார்த்தைக்குள் ஒளிந்திருக்கும் வன்முறை



அம்மா அல்லது மனைவி சமையலை முடித்து விட்டு, “சாப்பாடு ரெடி...” என்று அழைக்கும் போது, “அப்புறமா சாப்பிடுறேன்...” என்று அழைப்பை தட்டிக் கழிக்கும் ஆண் நீங்களா..? உணவுக்கான அழைப்பை நிராகரிக்கும் ஆண்களை அராஜகவாதி என்றும் பெண்களை கொடுமைப் படுத்தும் குரூரப் புத்தி கொண்டவர்கள் என்றும் விமர்சனம் செய்கிறார் ஞானகுரு.

அதெப்படி... காலம் காலமாக இப்படித்தானே நடக்கிறது. என் அப்பாவும் இப்படித்தான் செய்தார்... நானும் அப்படித்தான் செய்கிறேன். வேலையை முடித்துவிட்டு பிறகு சாப்பிடலாம் என்று சொல்வது ஒரு குற்றமா...? என்று அப்பாவி போன்று ஆண்கள் கேட்கிறார்கள். இது ஆணவக் குற்றம் என்பதுகூட தெரியாத அளவுக்கு ஆண்கள் மூளைச்சலவை செய்யப்பட்டுள்ளனர். இது அடிமைத்தனத்தின் நீட்சி என்பதை உணராமல் பெண்ணும் இருக்கிறாள்.

சமையல் கட்டு இன்றும் பெண்களுக்கு மட்டுமே உரித்தான சொத்தாக கருதப்படுகிறது. சில ஆண்கள் பெண்களுக்கு சமையலில் உதவுகிறார் கள் என்றாலும் பெரும் பொறுப்பு பெண்ணுக்கே இருக்கிறது. அங்கு அவள் ராணியாக இருந்தாலும் அதெல்லாம் மாயை மட்டுமே. ஞாயிறு மதியம் என்று வைத்துக் கொள்ளுங்கள். மீனை சுத்தம் செய்து, குழம்புவைத்தும், பொறித்துவைத்தும் சூடாக பரிமாறுவதற்கு விரும்பி அழைப்பார் மனைவி. பெரும்பாலும் ஆண்கள் முதல் குரலுக்கு வருவதில்லை. லேப்டாப்பில் வேலை பார்த்துக் கொண்டு இருந்தாலும், தொலைக்காட்சியில் பொழுதுபோக்கு நிகழ்ச்சியை ரசித்துக்கொண்டு இருந்தாலும் உடனடியாக அழைப்பை ஏற்பதில்லை. சிலர் உடனடியாக பதில்கூட சொல்வதில்லை.

‘‘இதோ பத்து நிமிஷத்துல வந்துடுறேன்...’’ என்பார்கள். அப்பாவை பார்த்து பிள்ளைகளும் அதே போன்று ஒரு பதிலை சொல்லும். விடுமுறை தினத்தில் நிதானமாக சாப்பிடட்டும் என்ற மனநிலையில் அதனை ஏற்றுக்கொள்வார். சமையல் அறையில் எல்லாவற்றையும் மூடி வைத்துவிட்டு, ஓய்வு எடுப்பதற்கு மனைவி அக்கடா என்று உட்கார்ந்த சில நிமிடங்களில், ‘‘சாப்பாடு போடுங்க” என்று குரல் வரும். உடனே பதறியடித்து பெண் செல்ல வேண்டியிருக்கும். இப்போதும் அத்தனை பேரும் ஒரே நேரத்தில் வருவதில்லை. எல்லோரையும் மீண்டும் மீண்டும் சத்தம் போட்டு அழைத்து பரிமாற வேண்டியிருக்கும்.

“மீன் ஆறிப்போயிருக்கே... கொஞ்சம் லேசா சுட வைச்சுக் குடு...” என்று ஆசையாகக் கேட்கும்போது, உடலில் சோர்வு இருந்தாலும் அதை காட்டிக் கொள்ளாமல் மீண்டும் அடுப்பை பற்றவைத்துக் கொடுக்க வேண்டியிருக்கும். அனைவரும் சாப்பிட்டு முடித்த பிறகு மிச்சம் மீதி இருப்பதை சாப்பிட்டுவிட்டு, பாத்திரங்களை ஒதுக்கி முடிப்பதற்குள் அடுத்த ஒரு மணி நேரம் காணாமல் போயிருக்கும். நேரத்துடன் உடல் உழைப்பும் உறிஞ்சப்படு கிறது. ஆகவே, பெண்ணின் அகராதியில் ஞாயிறு என்பது விடுமுறை அல்ல.

”எல்லாம் சமைச்சு வைச்சாச்சு... எடுத்துப் போட்டு சாப்பிட்டுக்கோங்க..” என்று சொன்னால், “இவ்வளவு செஞ்சீங்க.. சாப்பாடுகூட பரிமாற மாட்டீங்களா..?” என்று அன்பாகவும், அதிகாரமாகவும், அதட்டலாகவும் கேட்பார்கள்.

”பொம்பளைக்கு சாப்பாடு சமைக்கிறதைவிட, அதை பாசத்தோடு பரிமாறுவதுதான் முக்கியம்...” என்று பாடம் நடத்துவார்கள். சில ஆண்களுக்கு சப்பாத்தியோ, தோசையோ, அடுப்பிலிருந்து நேராக சுடச்சுட தட்டுக்கு வர வேண்டும். முன்கூட்டியே சுட்டு வைப்பதை சாப்பிடவே மாட்டார்கள். இவர்கள் எப்போது சாப்பாட்டு மேஜைக்கு வருவார்கள் என்று பெண் காத்திருந்து சுட்டுத்தர வேண்டும். இதெல்லாம் ஒரு கொடுமை என்று தெரியாமலே பெண்களை கொடுமைப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

பெண்ணின் அழைப்பை அசட்டை செய்வது சாதாரண அவமானம் மட்டுமல்ல. பெண் என்பவள் எல்லா காலங்களிலும் அடிமை என்பதை அழுத்தம் திருத்தமாக புரியவைக்கும் ஒரு முயற்சி. எனவே, “வேலைக்குப் போகாம வீட்டுலதான இருக்காங்க... இதை செய்றதுதானே பொம்பள வேலை...” என்று விட்டேத்தியாகச் சொல்கிறார்கள்.

“ஆம்பிளைப் பிள்ளைங்க போலவே பொம்பளைப் பிள்ளைங்களும் லேட்டாத்தானே சாப்பிடுறாங்க...” என்றால், அந்த பெண் பிள்ளைகள் செய்வதும் துன்புறுத்தலே. தாயையும் மனைவியையும் அடிமை போன்று நடத்துவதில் அப்படி என்ன இன்பம் கிடைத்துவிடப் போகிறது..? எனவே, ’சாப்பிட வாங்க...’ என்று குரல் கேட்டவுடன், சந்தோஷமாக சாப்பிடச் செல்லுங்கள். சாப்பாடு எடுத்து வைப்பதற்கும், பரிமாறுவதற்கும் உதவி செய்யுங்கள். உணவின் சுவை பற்றி மனம் திறந்து பேசுங்கள்.

அதுதான் பெண்ணுக்கும் உணவுக்கும் தரவேண்டிய மரியாதை.




www.gyanaguru.com

# மதம் மக்களின் அபின்

'மதம் மக்களின் அபின்' என்று கார்ல் மார்க்ஸ் 1844ம் ஆண்டு கூறினார். எதற்காக அபின் என்ற வார்த்தையை பயன்படுத்தினார்..?

ஒபியம் எனப்படும் அபின் ஒரு வலி நீக்கியாக இன்றும் மருத்துவத்தில் பயன்படுகிறது. அதாவது தற்காலிக வலி நீக்கியாக அபின் பயன்படுகிறது. ஆனால், நோயில் இருந்து நிரந்தரமாக விடுதலை வேண்டுமென்றால், வேறு சிகிச்சை முறையை மட்டுமே கடைபிடிக்க வேண்டியிருக்கும். அந்த சிகிச்சையில் கண்டிப்பாக அபினுக்குத் தேவை இருக்காது.

அப்படித்தான் மதம் மனிதனுக்குப் பயன்படுகிறது. வலி, வேதனை, துன்பத்திலிருக்கும் மனிதருக்கு மதம் தற்காலிக ஆறுதல் அளிக்கிறது. ஆனால், அந்த பிரச்னைகளில் இருந்து மனிதர்கள் முழுமையாக வெளியே வரவேண்டும் என்றால் மதம் பயன்படாது. முழுமையாக மதத்தில் இருந்து வெளியே வருபவர்களுக்கு மட்டுமே தீர்வு தென்படும்.







# கவித்துவம்



குழந்தைகள் வரைந்த வட்டம்
வட்டமாய் இருக்காது.
ஆயினும் அது தான் வட்டம்.
சந்தேகமிருந்தால் நீங்கள்
சூரியனையும் பூமியையும்
ஒருமுறை கேட்டுத்
தெரிந்து கொள்ளுங்கள்.

- சம்பத் கிருஷ்ணகுமார்

# பக்தியும் ஜாதியும் பலே பலே!

கோமாதா என்று பசுவை தொட்டு வணங்குவார்கள்… அகத்திக் கீரை கொடுப்பார்கள்… கோமியத்தைப் பிடித்து தலையில் தெளித்துக் கொள்வார்கள். அதே பசு மாடு திடீரென வீட்டுக்குள் நுழைந்துவிட்டால்… வயலில் மேய்ந்துவிட்டால் அடித்தே விரட்டுவார்கள்.

பாம்பு புற்றை தேடிச் சென்று பால், முட்டை வைத்து கும்பிடுவார்கள். நாக தோஷம் கழிப்பதற்கு விரதம் இருந்து பூஜை செய்வார்கள். நாகம் போன்று கல்லில் செய்து வைப்பார்கள். முற்பிறவி யில் நாகத்தை துன்புறுத்தியதாலே நாகதோஷம் ஏற்பட்டது என்பதை நம்புவார்கள். அவர்கள் கும்பிடும் நாகம் வீட்டுக்குள் வந்துவிட்டால், அடித்தே கொல்வார்கள்.

காகத்தை சனீஸ்வர பகவானின் வாகனம் என்று வணங்குவார்கள். அமாவாசைகளில் காகம் சாப்பிடாமல் பச்சைத் தண்ணீர்கூட விழுங்க மாட்டார்கள். காகம் ஜன்னல் பக்கம் வந்து கரைந்தால் நல்ல சகுனம் என்று சந்தோஷப்படுவார்கள். அதே காகம் தலையைத் தொட்டுவிட்டால் அல்லது மொட்டை மாடியில் காயப்போட்ட வடகத்தை கொத்த வந்தால், கல்லால் அடித்தே விரட்டுவார்கள்.

கோயிலுக்குச் சென்று பல்லியின் சிற்பம், தங்கத்தால் ஆன பல்லியைக் கண்டு வணங்குவார்கள். பல்லி கத்தினால் நல்ல பலன் என்று சொல்வார்கள். ஆனால், சமையல் கட்டில் பல்லியைப் பார்த்துவிட்டால் உடனே ஹிட் அடித்து கொன்றே போடுவார்கள்.

நாயை பைரவர் வாகனம் என்று சூடம் ஏற்றி கும்பிடுவது பக்தி. அதே நாய் பின் தொடர்ந்துவருகிறது என்றால், விரட்டுவதற்கு கல் எடுத்து எறிவது மனிதரின் புத்தி.

பன்றியை விஷ்ணுவின் அவதாரமாகக் கருதும் அதே மனிதர்கள்தான் பன்றியை நேரில் பார்த்தாலே முகம் சுளிக்கிறார்கள். பன்றியை மிகவும் கேவலமான உயிரினமாக கருதி விலகிச் செல்வார்கள்.

கடவுளுக்கு ஏதாவது உயிர்ப் பலி கொடுக்க வேண்டும் என்றால் ஆடு, கோழியை கொடுப்பவர்கள், தங்களிடமிருந்து எதையாவது கொடுக்க வேண்டும் என்றால், எதற்கும் உதவாத மயிரைக் கொடுப்பார்கள்.

எல்லாமே பகவான் செயல். அவன் எழுதி வைச்சது தவிர வேறு எதுவும் நடக்காது. இறைவன் நினைத்தால் நமது நோயை உடனே தீர்த்துவைப்பார், நமது துன்பங்களை விரட்டியடிப்பார் என்றெல்லாம் உறுதியாக நம்பும் அதே மனிதர்கள், உடலில் நோய் வந்தவுடன் கோயிலுக்குச் செல்வதில்லை. பக்கத்தில் இருக்கும் தரமான மருத்துவமனையை நாடிச் செல்வார்கள்.

இறைவனின் நாமத்தை சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் பிள்ளைக்கு கடவுளின் பெயரை வைத்தேன் என்று பேசும் அதே மனிதர்கள், பிள்ளையை பெயர் சொல்லி திட்டும்போது அது கடவுளின் பெயர் என்று யோசிப்பதே இல்லை.

என்னிடம் இருக்கும் எல்லா பணமும் கடவுளுக்குச் சொந்தம் என்று பக்திப் பெருக்குடன் சொல்லும் மனிதர்கள், கோயில் உண்டியலைக் கண்டதும் சில்லறைக் காசு அல்லது குறைந்த மதிப்புள்ள பணத்தை மட்டுமே உருவி போடுவார்களே தவிர, எல்லா பணத்தையும் இறைவனுக்குத் தருவதில்லை.

கள்ளத்தொடர்பு வைத்திருக்கும் நபர்களிடம் ஜாதி, அந்தஸ்து பார்க்காத நபர்கள்தான், திருமணம் முடிப்பது என்றால் மட்டும் ஜாதி, மத, அந்தஸ்துக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

வீடு வாங்கும்போது யாரிடமும் இருந்து வாங்கிக்கொள்வார்கள். ஆனால், அந்த வீட்டை வாடகைக்கு விடும்போது மட்டும் என்ன ஜாதி என்று கேட்பார்கள். பஸ், ரயில், விமானத்தில் செல்லும்போது எந்த ஜாதிக்காரன் ஓடுகிறார் என்று கண்டுகொள்ள மாட்டார்கள். சொந்த காருக்கு மட்டும் தன்னுடைய ஜாதியிலே டிரைவர் தேடுவார்கள்.

கோயில் கட்டும்போது எல்லா ஜாதியினரும் எல்லா மதத்தினரும் அங்கு வேலை பார்ப்பதை கண்டுகொள்ள மாட்டார்கள். கோயில் கட்டியபிறகு கருவறைக்குள் வேறு ஜாதியினரை அனுமதிக்க மாட்டார்கள்.



“மந்திரச்சொல்

மகிழ்ச்சியுடன்
வாழ்வதைவிட, சிறந்த
சாதனை வேறு
எதுவுமில்லை.”



www.gyanaguru.com

# வார்த்தைகளே வரம்

**1**

மனிதர்கள் நேசிக்கப்படவும் பொருட்கள் பயன்படுத்தவும் வேண்டும். ஆனால், பொருட்கள் விரும்பப்படுவதும், மக்கள் பயன் படுத்தப்படுவதுமே துன்பங்களுக்குக் காரணம்

**தலாய்லாமா**

**2**

கண்ணுக்கு முன்பு துயரப்படும் மனிதர்களை நேசிக்கத் தெரியாதவர்களால் எப்படி கண்ணுக்குத் தெரியாத கடவுளை நேசிக்க முடியும்?

**தெரசா**

**3**

பாதுகாப்பு முக்கியமெனில் கரையில் நில்லுங்கள்... பொக்கிஷம் வேண்டுமென்றால் கடலுக்குள் செல்லுங்கள்

**சூஃபி**

**4**

தன்னைத் தவிர வேறு யாரிடமும் மனிதர்கள் எச்சரிக்கையாக இருக்கத் தேவையில்லை

**பெர்னாட்ஷா**

**5**

அமைதியாக இருப்பது ஒருபோதும் தவறாக மொழி பெயர்க்கப்படு வதில்லை

**கால்வின் கூல்கிஜ்**

**6**

நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் உங்கள் கவலைகளைப் பற்றி மனம் விட்டு பேசுவதுதான் அதற்கான எளிதான தீர்வு

**ரோஸ் ஹில்ஃபெர்டிங்**

**7**

நம்பிக்கைதான் சந்தேகத்தை கொண்டு வருகிறது. எந்த நம்பிக்கையும் இல்லையென்றால் எந்த ஐயமும் இருப்பதில்லை

**ஓஷோ**

**8**

அழகை ஆராதிக்கத் தெரிந்தவர்களுக்கு ஒருபோதும் வயதாவதில்லை

**காஃப்கா**

**9**

வசதியாக இருப்பதாக உணரும் தருணத்தில் அந்த இடத்தைவிட்டு விலகவில்லை என்றால் வெற்றியடைய முடியாது

**வால்ட் டிஸ்னி**

**10**

தவறான பாதையில் எவ்வளவு தூரம் போயிருந்தாலும் சரி, புரிந்தவுடனே திரும்பிவாருங்கள்

**கதே**



# பெற்றோர் கையில் மந்திரக்கோல்

பிள்ளைகளை வளர்ப்பது எல்லா காலங்களிலும் குழப்பமாகவே இருக்கிறது. தங்களை எப்படி வளர்த்தார்களோ, அதைவிட சிறப்பாக தங்கள் குழந்தையை வளர்க்க வேண்டும் என்பதையே மைல்கல்லாகக் கொண்டு அனைவரும் செயல்படுகிறார்கள். ஆனால், எல்லா காலங்களிலும் பெற்றோர் சொல்வதை பிள்ளைகள் கேட்பதே இல்லை. ஏனென்றால் தங்களை சரியாக வளர்ப்பதற்கு பெற்றோருக்குத் தெரியவில்லை என்றே உலகிலுள்ள அத்தனை பிள்ளைகளும் நம்புகிறார்கள்.

பிள்ளைகளிடம் நல்ல பண்புகள் உருவாவதற்கு பெற்றோர்களே காரணமாக இருக்கமுடியும். எனவே, பிள்ளை களுக்கு நல்ல பண்புகளை எல்லாம் பெற்றோர் மட்டுமே முழுமையாகவும் தெளிவாகவும் சொல்லித்தர முடியும். இந்த கற்றலை குழந்தை பிறந்த தினத்திலிருந்தேபெற்றோர்தொடங்கவேண்டியது அவசியமாகும். பிள்ளை இன்னும் கொஞ்சம் வளரட்டும், இன்னும் கொஞ்சம் வயதாகட்டும் என்றெல்லாம் காலம் தாழ்த்துவது சரியல்ல. ஆகவே, என்னவெல்லாம் கற்றுத்தர வேண்டும் என்பதை பார்க்கலாம்.

**சுய ஒழுக்கம் :**

தினமும் குளிப்பது, சாப்பிடுவது, தூங்குவது பள்ளிக்குச் செல்லவேண்டிய பொருட்களை முதல் நாளே எடுத்துவைப்பது, தினமும் சாக்ஸை துவைக்கப்போடுவது, பள்ளியில் இருந்து திரும்பியதும் ஷூ, புத்தகங்களை சரியான இடத்தில் வைப்பது போன்றவற்றை குழந்தைகளே செய்ய வேண்டும். இந்த செயல்களுக்கு எந்த வகையிலும் பெற்றோர் உதவி செய்யவேண்டிய அவசியம் இருத்தல் கூடாது. குப்பையை சரியான இடத்தில் போடுவது, பொது இடங்களிலும் தூய்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பது, செடிகள், மிருகங்கள் பிற மனிதர்களை மதிப்பது போன்ற பண்புகளையும் சொல்லித்தர வேண்டும்.

**அடிப்படை தகுதிகள் :**

பிள்ளைகளுக்கு படிப்பு தவிர வேறு எந்த சுமையும் கொடுத்துவிடக் கூடாது என்பதற்காக பெற்றோர் எந்த வேலையும் அவர்களுக்குத் தருவதில்லை. அதுவும் ஆண் பிள்ளைகளுக்கு கூடுதல் செல்லம் கொடுத்து வேலை செய்யவிடாமல் தடுக்கிறார்கள். ஆண் பிள்ளை, பெண் பிள்ளை என்று வித்தியாசம் பார்க்காமல் இரண்டு பிள்ளைகளுக்கும் சிம்பிள் சமையல் செய்வதற்கு கற்றுத்தர வேண்டும். சப்பாத்தி, தோசை சுடுவது, இட்லி அவிப்பது, முட்டை அவிப்பது, ஆஃப்பாயில் போடுவது, பிரட் டோஸ்ட் செய்வது, நூடுல்ஸ் என்பது போன்ற அவசர சமையல் கண்டிப்பாகத் தெரிந்திருக்க வேண்டும். என் பொண்ணுக்கு வெந்நீர் போடவே தெரியாது என்று பெருமை பேசுவது பிள்ளைகளுக்குச் செய்யும் துரோகம் ஆகும். அதேபோல் வீட்டை சுத்தமாக பராமரிப்பதில் பிள்ளைகளுக்கு ரொம்பவே பொறுப்பு உண்டு. எல்லா விளையாட்டு சாமானையும் இப்படித் தான் போட்டு வைப்பான் என்று பெருமையாகப் பேசாமல், விளையாடி முடித்ததும் எடுத்து ஒரே இடத்தில் வைக்கவேண்டும் என்று பழக்குங்கள்.

**குடும்பத்துக்கு முதலிடம் :**

பெற்றோரைத் தவிர வேறு யாரும் எல்லா காலகட்டத்திலும் துணையாக இருக்கப்போவதில்லை என்பதை உறுதிபட சொல்லித்தர வேண்டும். ஏனென்றால், பள்ளி வயதினருக்கு வாழ்க்கையின் அர்த்தமும் அடர்த்தியும் தெரியாது. பெற்றோரைத் தவிர வேறு யாரையும் எதற்காகவும் நம்பக்கூடாது என்பதையும் சொல்லித்தர வேண்டும். பிறர் தரும் பரிசுகள், இனிப்புகளை பெற்றோர் அனுமதியின்றி வாங்கக்கூடாது என்பதை கண்டிப்புடன் சொல்லிக் கொடுக்க வேண்டும். குட் டச், பேட் டச் என்று சொல்லித்தராமல் எந்த டச்சுமே சரியானது இல்லை என்பது பிள்ளைகளுக்குப் புரிந்திருக்க வேண்டும்.

**பண மதிப்பு :**

பணம் சம்பாதிப்பது மிகவும் கடினமான செயல் என்பதையும், தேவையில்லாமல் செலவழிப்பதற்கு பிள்ளைகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொல்லித்தர வேண்டும். வீட்டில் இருக்கும் பொருட்களை எந்த காரணத்துக்காகவும் யாருக்கும் எடுத்து கொடுத்து விடக் கூடாது என்பதையும் வீட்டில் என்னவெல்லாம் இருக்கிறது என்பதை வேறு யாருக்கும் தெரிவிக்கக்கூடாது என்பதையும் பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டும்.

**உறவுக்கு மரியாதை :**

அக்கம்பக்கத்தினருடன் புன்னகையுடன் பழகுதல், நண்பர்களுக்கும் முதியவர் களுக்கும் மரியாதை கொடுத்தால், கேள்விகளுக்குப் பதில் சொல்லுதல், பகிர்ந்து கொடுத்தல் உண்ணுதல், யாரையும் அவமானப்படுத்தாமல் இருத்தல் போன்றவற்றை கற்றுத்தர வேண்டும். எல்லா நேரங்களிலும் உண்மை பேசுவது முக்கியம் என்பது பிள்ளைக்குப் புரிய வேண்டும்.

**கூடுதல் தகுதிகள் :**

கையில் சூடு பட்டுவிட்டால் உடனடியாக தண்ணீர் விட்டு கழுவி துடைத்துவிட்டு, அதற்கான மருந்து தடவ வேண்டும் என்பது போன்ற சின்னச்சின்ன முதலுதவி சிகிச்சைகள் பிள்ளைக்குத் தெரிந்திருக்க வேண்டும். நீச்சல், சைக்கிள், ஸ்கேட்டிங், இசை போன்றவை கட்டாயம் கற்றுத்தர வேண்டும். வீட்டு முகவரி, தொலைபேசி எண்கள், பஸ் ஸ்டாண்ட், ரயில்வே ஸ்டேஷன் போன்றவை அறிந்திருக்க வேண்டும். வீட்டுக்குள் விளையாடும் செஸ், கேரம்போர்டு ஆகியவற்றுடன் வெளி அரங்கத்தில் விளையாடும் குழு விளையாட்டுகள் இரண்டாவது அறிந்திருக்க வேண்டும்.

இவை எல்லாவற்றையும் விட தோல்வி என்பது வாழ்க்கை யில் சகஜம் என்பதை பிள்ளைகளுக்கு ஆழமாக கற்றுத்தர வேண்டும். எல்லா நேரங்களிலும் ஒருவரால் வெற்றி பெற முடியாது என்பதையும் தோல்வி அடைவதை அவமானமாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்றும் சொல்லித்தர வேண்டும். பிள்ளைகளுக்கு கற்றுத்தரும் அத்தனை பண்புகளும் பெற்றோரிடமும் இருக்கவேண்டியது அவசியம். அவர்களிடம் இல்லாத ஒன்றை பிள்ளைகள் கடைபிடிக்க மாட்டார்கள். வீட்டில் இருந்துகொண்டே, நான் வெளியூரில் இருக்கிறேன் என்று பிறரிடம் பொய் சொல்லும் தந்தையும், கடையில் வாங்கிய பிரியாணியை தானே செய்ததாக விருந்தினரிடம் பொய் சொல்லி பரிமாறும் அம்மாவும், பிள்ளைக்கு மறைமுகமாக பொய் சொல்வதற்கு கற்றுத்தரு கிறார்கள். ஆகவே, முதலில் நல்ல பெற்றோராக இருங்கள், அதையே பிள்ளைகளுக்கு சொல்லியும் கொடுங்கள்.

நல்ல பண்புகளுடன் பிள்ளை வளர்ப்பதுதான் இந்த சமூகத்திற்கு பெற்றோர் செய்யும் பெருநன்மை.


www.gyanaguru.com

# சிரிப்பு டானிக்

சிரிப்பைவிட சிறந்த மருந்து இந்த உலகில் இல்லவே இல்லை. அதனால் ஏற்கெனவே படித்த ஜோக் என்றாலும் மீண்டும் படியுங்கள்... சிரியுங்கள். நீங்கள் ரசித்த ஜோக்கை பிறருக்குச் சொல்லி சிரிக்க வையுங்கள். சிரிச்சுக்கிட்டே இருங்க...

## அழகான பெண் டிரைவர்


ஒரு பெண் டிரைவிங் லைசென்ஸ் வாங்கச் சென்றார். ஆர்.டி.ஓ. கேட்ட கேள்விக்கு அவர் சொன்ன பதில் திருப்தியாயில்லை. லைசென்ஸ் தர மறுத்து விட்டார். இரண்டாம் முறை சென்ற போதும் அவர் சொன்ன பதில் திருப்தியாயில்லை. லைசென்ஸ் தர மறுத்து விட்டார். மூன்றாம் முறை சென்ற போதும் சரியான பதில் இல்லை என்று லைசென்ஸ் தர மறுத்து விட்டார். நான்காவது முறையும் ஆர்.டி.ஓ. கேட்ட கேள்விக்கு அந்தப் பெண் சொன்ன பதில் திருப்தியாயில்லை என்பதால் லைசென்ஸ் தர மறுத்து விட்டார்.

பெண்ணுக்கு கடுமையான கோபம் வந்து விட்டது.நீங்கள் என்னதான் எதிர்பார்க்கிறீர்கள். நான் சொன்ன நாலு பதில்களையும் தவறென்று சொன்னால் நான் என்ன செய்ய முடியும்? என்று நியாயம் கேட்டார்.

அதற்கு அந்த ஆர்.டி.ஓ., “நான் என்ன கேள்வி கேட்டேன். நீங்கள் ஹைவேயில் 125 கி.மீ. வேகத்தில் காரை ஓட்டிக்கொண்டு போகிறீர்கள். திடீரென்று உங்கள் முன் ஒரு கிழவனும் ஒரு இளைஞனும் வெவ்வேறு திசையிலிருந்து வந்து விட்டார்கள். வலது பக்கம் பாறை இருக்கிறது. இடது பக்கம் ஆழமான பள்ளம் இருக்கிறது. ஆகவே, நீங்கள் என்ன செய்வீர்கள் என்று கேட்டேன். அதற்கு முதல் தடவை, பள்ளத்தில் இறக்கு வேன் என்று சொன்னீர்கள். இரண்டாவது தடவை கிழவர் மீது காரை ஏற்றுவேன் என்றீர்கள். மூன்றாவது தடவை இளைஞன் மேல் காரைவிடுவேன் என்றீர்கள். நான்காவது தடவை பாறை மேல் மோதுவேன் என்று சொன்னீர்கள்...”

“இவற்றைத் தவிர நான் வேறு என்னதான் செய்ய முடியும்..?

“காரில் பிரேக் என்று ஒன்று இருக்கிறது. பிரேக்கை அழுத்தி காரை நிறுத்த வேண்டும்...” என்று தலையில் அடித்துக்கொண்டார் அலுவலர்.



## நல்ல மனைவி

மனைவி : ஏங்க...! கிச்சன்ல அந்த உப்பு டப்பாவ எடுத்துக்கிட்டு வாங்க.

கணவன் : எங்க வச்சிருக்க... காணமே?

மனைவி : உங்களால எந்த வேலதான் செய்ய முடியும்?

கணவன் : நல்லா தேடிட்டேன்மா கிடைக்கல.

மனைவி : உங்கம்மா உங்கள எப்பிடித்தான் வளத்தாங்களோ? உருப்படியா ஒரு வேலை செய்ய முடியுதா. உங்களை என் தலைல கட்டிவச்சு எங்க வீட்டுக்காரங்க என்னை ரொம்ப ஏமாத்திட்டாங்க. நீங்கல்லாம் ஆபீஸ்ல பத்து பேரை எப்பிடித்தான் கட்டி மேய்க்கிறீங்க. இதுல மேனேஜர்ன்னு ஒரு பதவி வேற.!!


கணவன் : இல்ல...நெஜமாவே உப்பு டப்பாவே காணல டி.

மனைவி : உங்களால ஒரு வேலையும் உருப்படி யாச் செய்ய முடியாதுன்னு தெரிஞ்சு தான் உப்பு டப்பாவ முதல்லயே இங்க கொண்டு வந்துட்டேன்.

கணவன் : ..???



# சகாதேவனை மிஞ்சியவர்களா நம் ஜோதிடர்கள்..?



ஜோதிடம் குறித்து மகாபாரதம் தெரிவிக்கும் ஒரு கருத்து முக்கியமானது. மகாபாரத கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை என்றாலும், சுவாரஸ்யமான சில தகவல்களை அறிந்து கொள்வோம்.

மகாபாரதத்தில் சகாதேவன் ஜோதிடத்தில் நிபுணத்துவம் பெற்றவனாக இருப்பான். அதனால்தான், போர் தொடங்குவதற்கு நல்ல நேரத்தைக் குறித்துத் தருமாறு துரியோதனனே வந்து சகாதேவனிடம் கேட்பான். தன்னிடம் ஆலோசனை கேட்க வரும் யாரையும் ஏமாற்றக் கூடாது என்ற ஜோதிட தொழில் முறை படி சகாதேவனும் மிகச்சரியான நாளை கணித்துத் தருவான். ஆனால், அதில் கிருஷ்ணர் கொஞ்சம் குழப்பத்தை ஏற்படுத்தி, வெற்றியை தடுப்பதாக கதை போகும்.

அதாவது, வெற்றிக்கு உகந்த நாள் என்று குறித்துக் கொடுத்தபிறகும் அந்த நாளை மாற்றிவிட முடியும் என்பது ஜோதிடம் மீதான நம்பிக்கையை குழப்பும் செயல்.

ஜோதிடத்தில் சகாதேவன் எப்படி நிபுணத்துவம் பெற்றான் என்பதற்கு ஒரு வித்தியாசமான கதை சொல்லப்படு வதுண்டு. பாண்டவர்களின் தந்தையான பாண்டு, அவரது உயிர் பிரியும் தருணத்தில் தனது மகன்கள் ஐவரிடமும் ஒரு வேண்டுகோள் வைப்பார். அதாவது என்னுடைய உடலை தகனம் செய்து விடாமல், நீங்கள் அனைவரும் உணவாக உண்டுவிட வேண்டும். அப்படி செய்து விட்டால் முக்காலமும் உணரும் ஆற்றலும், மரணமில்லா பெருவாழ்வும் கிடைத்துவிடும் என்று சொல்லிவிட்டு உயிர் துறக்கிறார்.

அதன்படி நடப்பதற்கு முன்வரும் பாண்டவர்களை, கிருஷ்ணர் தடுத்துவிடுவார். அதாவது, சிரஞ்சீவியாக ஐந்து பேரும் வாழ்வது என்றால் எழுதப்பட்ட விதியில் குழப்பம் உருவாகிவிடும் என்று சொல்லி, உடலை தகனம் செய்வதற்கு ஏற்பாடு செய்வார். அனைவரும் கிருஷ்ணர் சொல்லை அப்படியே ஏற்றுக்கொள்வார்கள். ஆனால், சகாதேவன் மட்டும், யாருக்கும் தெரியாமல் தந்தையின் சுண்டுவிரலை உடைத்து தின்றுவிடுவான்.

அதனால், அவனுக்கு முக்காலமும் உணரும் ஞானம் கிடைத்துவிடுகிறது. இதை அறியும் கிருஷ்ணன், ‘எதிர்கால ரகசியங்களை யாரிடமும் சொல்லிவிடக் கூடாது’ என்று சத்தியம் வாங்கிக் கொள்வார். கிருஷ்ணரின் பேச்சுக்கு மதிப்பு கொடுத்து, யாருக்கும் எதிர்கால ரகசியத்தை சகாதேவன் சொல்ல மாட்டான்.

குருஷேத்திரப் போரில் பாண்டவர்கள் வெற்றி பெற்ற பிறகும், அவர்களுக்கு மகிழ்ச்சி இருக்காது. ஏனென்றால், முடி சூட்ட வேண்டிய மூத்த சகோதரர் கர்ணனை கொன்றுவிட்ட குற்றவுணர்ச்சி யில் அனைவரும் தவிப்பார்கள்.

இந்த நிலையில் கிருஷ்ணனை சந்திக்கும் சகாதேவன், ‘‘கிருஷ்ணா உண்மையைச் சொல். ஜோதிடம் என்பது பொய்தானே..?” என்று கேட்பான்.

“உனக்குத்தான் முன்கூட்டியே இந்த யுத்தம் இப்படித்தான் முடிவுக்கு வரும் என்று தெரியுமே..? பிறகும் ஏன் ஜோதிடம் மீது அவநம்பிக்கை” என்று கிருஷ்ணன் கேட்பான்.

அதற்கு சகாதேவன், ‘‘இல்லை கிருஷ்ணா. நான் கர்ணன் பற்றி ஜோதிடத் தில் அறிந்துகொள்ள ஆசைப்பட்டேன். என்னால் எதுவும் அறிய முடியவில்லை. அவர் என் சகோதரர் என்பதை ஏன் என்னால் கணிக்க இயலவில்லை..?’’ என்று குமுறுவான்.

உடனே கிருஷ்ணன், “சகாதேவா… ஜோதிடத் தில் எல்லாமே அறிந்துகொள்ள முடியும் என்றால் பிறகு கடவுள் எதற்கு..? விதியின் ரகசியங்களை அந்த இறைவனால்கூட அறிந்து கொள்ள முடியாது” என்று சமாதானப்படுத்துவார்.

இதற்கு என்ன அர்த்தம்..?

அதாவது ஜோதிடம் மூலம் எல்லாவற்றையும் கணிக்க முடியாது என்று கிருஷ்ணர் ஒப்புக் கொள்கிறார். ஆகவே, ஜோதிடத்தை கணிப்பதும், பலிப்பதாகச் சொல்வதும் எப்படி சரியாக இருக்கும்…? சகாதேவனாலே கணிக்க முடியாததை இன்றைய லோக்கல் ஜோதிடர்கள் சாதித்து விடுவார்களா..?.

அப்புறம் என்னப்பா பஞ்சாயத்து..?

சினிமா எனும் வாழ்க்கை

# கொண்டாட்டமும் கும்மாளமும் நிரம்பி வழியட்டும்...

## எ பாய் கால்டு கிறிஸ்மஸ்



மகிழ்ச்சியோடு கொண்டாடுவதற்காகவே பண்டிகைகள் உருவாக்கப்பட்டுள்ளன. புத்தாடையும் பட்டாசுகளும் நம் நாட்டினருக்கு தீபாவளி சந்தோஷத்தைக் கொண்டுவருகிறது என்றால் கேக்கும் பரிசுகளும் நிறைய மக்களுக்கு கிறிஸ்மஸ் ஆனந்தம் தருகின்றன.

இயேசு பிறந்த நாளே கிறிஸ்மஸ் என்று கொண்டாடப்படுகிறது என்றாலும், பைபிளில் எந்த இடத்திலும் இயேசு கிறிஸ்து பிறந்த தேதியைப் பற்றி தகவல்கள் தெளிவாக இல்லை. 'பாவப்பட்ட மக்களை மீட்டெடுக்க இறைவனின் திருமகன் வசந்தகாலம் தோன்றும்போது இந்த மண்ணுலகில் மகனாகப் பிறப்பார்' என்ற வேத வசனங்களே கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் ஆரம்பப்புள்ளி. எனவே, கிறிஸ்மஸை இயேசுவின் பிறந்த தினமாக பலரும் ஏற்பதில்லை என்றாலும் இந்த நாளை மகிழ்வுடன் கொண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள். பெரியவர்களுக்கு நம்பிக்கையும் சிறியவர்களுக்கு மகிழ்ச்சியும் தரும் கிறிஸ்மஸ் எப்படி உருவானது என்பதற்கான ஒரு சுவாரஸ்ய கற்பனையே எ பாய் கால்டு கிறிஸ்மஸ்.

சமீபத்தில் தாயை இழந்த மூன்று குழந்தைகளின் தந்தை மாட். கிறிஸ்மஸ் தினத்தன்று அவசர வேலையாக மாட் வெளியே செல்வதால், அன்றைய இரவு அத்தை ரூத் குழந்தைகளின் பாதுகாவலராக இருக்கிறார். தாயைப் பிரிந்த வருத்தத்திலிருக்கும் குழந்தைகளுக்கு ஒரு கதை சொல்லத் தொடங்குகிறார்.

மரவெட்டியான ஜோயலும் சிறுவன் நிகோலஸும் பின்லாந்தின் காட்டுப்பகுதியில் வசிக்கிறார்கள். நிகோலஸின் தாயை சமீபத்தில் ஒரு கரடி கொன்றுவிட்டது. அவள் நிகோலஸ் மீது பேரன்பு கொண்டவள். தாய் சிறுமியாக இருந்த நேரத்தில் காட்டுக்குள் தொலைந்து போனதாகவும், அவளுக்கு எல்ஃப் எனப்படும் மாயாஜால உலகத்தினர் உதவி செய்ததாகவும் நிகோலஸுக்குச் சொல்லியிருக்கிறார். எல்ஃப் வசிக்கும் இடத்தில் நம்பிக்கை நிறைந்திருப்பதாகவும், அங்கே மகிழ்ச்சி வெள்ளமாக பெருகி யிருக்கும் என்றும் சொல்கிறாள். தாய் இறந்தபிறகு அதே கதையை தந்தையின் மூலம் கேட்கிறான். ஆனால், எல்ஃப் எனப்படும் மாயாஜால உலகம் எப்போதுமே இல்லை என்றும், அது தாயின் கற்பனை என்றும் தந்தை சொல்கிறார். ஆனாலும், நிகோலஸ் மாயாஜால உலகத்தின் மீது மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறான்.

வீட்டுக்குள் வரும் சிறிய எலியை தந்தை அடித்து கொல்லப்போகும் நேரத்தில் அதனை தடுத்து காப்பாற்றுகிறான். அந்த எலிக்கு மைக்கா என்று பெயர் சூட்டி வளர்க்கும் நிகோலஸ், அதற்கு பேசுவதற்கு கற்றுத்தருகிறான்.

இந்த நேரத்தில் அந்த நாட்டு அரசன் மக்களை ஒன்றுதிரட்டி, 'இப்போது மக்களுக்கு நம்பிக்கை தேவையாக இருக்கிறது. அப்படி நம்பிக்கையளிக்கும் ஒரு விஷயத்தைக் கொண்டுவருபவருக்கு அற்புதமான பரிசு வழங்கப்படும்' என்று அறிவிக்கிறார். இது ஒரு நல்ல வாய்ப்பு என்று நம்பும் ஜோயலின் நண்பர்கள், அப்படியொன்றைத் தேடிச் செல்வதற்கு முடிவெடுக்கிறார்கள். ஆகவே, சிறுவன் நிகோலஸை தனது சகோதரி கார்லோட்டாவின் பொறுப்பில் விட்டுச் செல்கிறான் ஜோயல்.

இனிப்பு மீது மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கும் அத்தை கார்லோட்டா சிறுவன் நிகோலஸை மிகவும் கொடுமைப்படுத்துகிறாள். பனி பொழியும் நேரத்திலும் வீட்டுக்கு வெளியே படுக்க வைக்கிறாள். தாய் விட்டுச்சென்றிருக்கும் ஒரு மேப் நிகோலஸுக்குக் கிடைக்கிறது. அதன் மூலம் மாயஜால உலகத்திற்கு செல்லமுடியும் என்று நிகோலஸ் நம்புகிறான். அதே நேரத்தில் தந்தை ஆபத்தில் இருப்பதாகவும் உணர்கிறான். ஆகவே, வீட்டிலிருந்து தன்னுடைய தோழனான மைக்காவுடன் மாய உலகத்தைத் தேடி கிளம்புகிறான்.




எலியான மைக்காவுடன் பேசிக்கொண்டே நகரும் நிகோலஸிடம் திடீரென மைக்கா பேசத் தொடங்குகிறது. எலியான உன்னால் எப்படி பேச முடிகிறது என்று நிகோலஸ் கேட்கும்போது, 'உன்னுடைய நம்பிக்கைதான் என்னை பேச வைக்கிறது..' என்று சொல்கிறது. காட்டுக்குள் போய்க்கொண்டே இருக்கிறான் நிகோலஸ். அம்பு குத்தி காயப்பட்டிருக்கும் பனி மான் ஒன்றை பார்க்கும் நிகோலஸ், அதற்கு சிகிச்சை யளிக்கிறான். காட்டுக்குள் செல்வதற்கு அவனுக்கு உதவுவதற்கு முன்வரும் பனி மானுக்கு பிளிட்ஸன் என்று பெயர் சூட்டுகிறான்.

தாயின் மேப் காட்டும் வழியின்படி எல்ஃப் இருக்கும் இடத்தை நிகோலஸ் மிகவும் சிரமப்பட்டு அடைகிறான். அங்கு தந்தையின் கத்தி கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைகிறான். அதேநேரம் அங்கே எல்ஃப் யாரையும் கண்டுபிடிக்க முடியாமல் நம்பிக்கை இழக்கிறான். அப்போது அங்கே வரும் லிட்டில் நூஸ் மற்றும் ஃபாதர் டோபோவும் நிகோலஸுக்கு நம்பிக்கை கொடுக்கிறார்கள். எல்ஃப் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையுடன் நீ பார்த்தால்

www.gyanaguru.com
www.gyanaguru.com




ஏ பாய் கால்டு கிறிஸ்மஸ்

எல்லாவற்றையும் காண முடியும் என்கிறார்கள். அந்த நம்பிக்கையுடன் பார்த்த வுடன், அவர்கள் அனைவருமே இப்போது எல்ஃப் கட்டுப்பாட்டிலுள்ள ஊருக்குள் இருப்பதை அறிகிறான்.

மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டிய எல்ஃப் இப்போது துயரத்துடன் இருக்கிறார்கள். ஏனென்றால், அழிந்துவிட்டதாக சொல்லப்படும் எல்ஃப் இன்னமும் இருக்கிறது என்ற நம்பிக்கையை அரசனிடம் கொடுப்பதற்காக அவர்களின் குழந்தையை மனிதர்கள் கடத்தியிருக்கிறார்கள். தன்னுடைய தந்தையும் அவரது நண்பர்களுமே இந்த கடத்தலை செய்திருக்கிறார்கள் என்பது தெரியவந்ததும் அதிர்ந்துபோகிறான். எல்ஃப் சமூகத்தினரிடம், 'நான் நிச்சயம் உங்கள் குழந்தையைக் கூட்டிக்கொண்டு வருவேன்...' என்று நம்பிக்கை தருகிறான்.

ஆனாலும், மனிதர்கள் மீது நம்பிக்கை இழந்துவிட்ட எல்ஃப் மகாராணி நிகோலஸை கைது செய்கிறாள். அந்த ஜெயிலில் இருந்து ஒரு குட்டித் தேவதையின் உதவியுடன் தப்பும் நிகோலஸ் தந்தையைக் கண்டுபிடிக்கிறான். ஒரு குழந்தையை பிடித்து பரிசு பெறுவது தவறு என்று எடுத்துக்கூறுகிறான். தன்னுடைய தவறை உணரும் தந்தை, அந்த குழந்தையுடன் நிகோலஸ் செல்வதற்கு அனுமதிக்கிறான். அந்த குழந்தையுடன் எல்ஃப் மக்களை சந்திக்கும் நிகோலஸுக்கு எல்ஃப் மக்கள் எல்லோரும் அன்புடன் நிறைய நிறைய பரிசுப் பொருட்கள் கொடுக்கிறார்கள்.

பறக்கும் மானில் ஏறி நாட்டுக்குத் திரும்பும் நிகோலஸ் நள்ளிரவில் அரசனை சந்திக்கிறான். இந்த பரிசு பொருட்களை எல்லாம் மக்கள் தூங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் அவர்களுடைய அறையில் வைத்துவிட்டால், காலையில் அவர்களுக்கு நம்பிக்கையும் மகிழ்ச்சியும் கிடைக்கும் என்கிறான். அப்படியே அந்த அரசர் கிறிஸ்மஸ் தாத்தா உடையில் மான் மீது ஏறி ஒவ்வொரு வீட்டுக்கும் ஜன்னல் வழியே நுழைந்து பரிசுகளை வைத்துவிட்டு வருகிறார். விடியும்போது, அந்த நாட்டு மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் எழுகிறார்கள். இப்படித்தான் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் ஆரம்பமானது என்று கதை சொல்லி முடிகிறார் அத்தை.



கதை சொல்லி முடித்ததும் வீட்டுக்குக் கிளம்பும் அத்தையை வழியனுப்ப ஹாலுக்கு வரும் குழந்தைகள் அங்கே கிறிஸ்மஸ் கொண்டாடுவதற்கான அலங்காரம் பிரமாண்டமாக செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கிறார்கள்.

கதை சொல்லி முடித்ததும் வீட்டுக்குக் கிளம்பும் அத்தையை வழியனுப்ப ஹாலுக்கு வரும் குழந்தைகள் அங்கே கிறிஸ்மஸ் கொண்டாடுவதற்கான அலங்காரம் பிரமாண்டமாக செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கிறார்கள். இந்த எதிர்பாராத மகிழ்ச்சியைத் தருவதற்காக தந்தை இப்படி ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளும் மூன்று பிள்ளைகளும் ஆனந்தத்தின் எல்லைக்கே போகிறார்கள். அத்தை குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள் சொல்லிக்கொண்டு வெளியேறும் நேரத்தில் அவளுடன் கொண்டாட்டமும் கொடி கட்டிப் பறக்கிறது.

கற்பனை உலகத்தை இந்த படம் காட்டுகிறது என்றாலும் குழந்தைகள் மனதில் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் ஆழமாக விதைக்கிறது. தாய் இழந்த சோகத்தில் தவிக்கும் குழந்தைகளிடம், 'இதுபோன்ற கசப்பான நிகழ்வுகள் நடக்கத்தான் செய்யும். இவற்றையும் ஏற்றுக்கொண்டு நகரத்தான் வேண்டும்' என்று அழுத்தமாக சொல்லிவைக்கிறது.

2015ம் ஆண்டு இதே பெயரில் வெளியான புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த படம் தயாரிக்கப்பட்டு 2021ம் ஆண்டு வெளியாகி வெற்றி பெற்றது. கிறிஸ்மஸ் கொண்டாட்டம் குறித்து இதுவரை ஆயிரக்கணக்கான புத்தகங்கள் வெளியாகியுள்ளன என்றாலும், இது ரொம்பவே ஸ்பெஷல். எத்தனை இழப்புகள், வேதனைகளுக்கு நடுவில் வாழ்க்கை இருந்தாலும், நம்பிக்கை மட்டும் இருந்தால் மகிழ்ச்சியை அனுபவிக்கலாம் என்பதை குதூகலமாக சொல்லித்தருகிறது. நீங்களும் குடும்பத்தோடு கண்டுகளியுங்கள்.



# மோட்சத்துக்கு போகும் வழி

வைத்தியநாதனின் தந்தை விரைவில் மரணம் அடையப்போகிறார் என்று ஞானகுரு வீசிய வெடியில் அதிர்ந்து நின்றான் வைத்தியநாதன். அவன் கண்களில் தெரிந்த மிரட்சியை ரசித்தபடி அவனை அணைத்துக் கொண்டார் ஞானகுரு.

கலங்கிய கண்களுடன், ‘‘சாமி பொய் சொல்லாதீங்க... எங்கப்பா ரொம்பவும் நல்லவர். பூஜை தட்டுல விழுற காசுக்குகூட ஆசைப்படாம, அதை அப்படியே உண்டியல்ல சேர்த்துடுவார். சிவன் சொத்தை சாப்பிடக் கூடாதுன்னு, வீட்டுச் செலவுக்காக பட்சணம் செஞ்சு விற்கிறார். வீடு, நிலம்னு புரோக்கர் வேலை பார்க்கிறார். அத்தனை நல்லவரா இருக்கிறவரைப் போய்...” என்று அழத் தொடங்கினான்.

கொஞ்சநேரம் அழவிட்டுக் காத்திருந்த ஞானகுரு, “புதைமணலில் ஒரு நல்லவனும் கெட்டவனும் விழுந்து விட்டார்கள். அப்போது ஒருவரை மட்டுமே காப்பாற்ற அவகாசம் இருக்கிறது, நீ யாரைக் காப்பாற்றுவாய்?”

எதற்கு இந்த நேரத்தில் இப்படி ஒரு கேள்வி என்பது போல் அழுகையை நிறுத்திப் பார்த்தான்.

“கேள்விக்கு முதலில் பதில் சொல்...”

“இதில் என்ன சந்தேகம் நல்லவனைத்தான்” என்றான் வைத்தியநாதன்.

“இயற்கை அல்லது இறைவனும் அப்படித்தான். இந்த உலகம் எனும் புதைமணலில் நல்லவர்களை நீண்டநாட்கள் கஷ்டப்பட விடுவதில்லை. அவருக்கு விருப்பமானவர்களை விரைவில் அழைத்துக் கொள்வார். இப்போது நீயும் இறைவன் சேவைக்குப் போய்விட்டால் உன் தாய், தங்கையை யார் பார்த்துக் கொள்வது?”

“எங்கப்பா ஜாதகத்தில பூரண ஆயுள்னு போட்டிருக்கே...”

“இப்போதே உன் தந்தை பூரணமாயிருப்பது உனக்குப் புரியவில்லையா? ஒரு பூசாரிக்கு கற்பூரத் தட்டில் கிடைக்கும் வருமானம் மீது ஆசை போய்விட்டது என்றாலே அவர் முழுமையடைந்து விட்டார் என்றுதான் அர்த்தம்” என்றார் ஞானகுரு.

‘‘உங்களால் அவரோட மரணத்தைத் தள்ளிப்போட முடியாதா” என்று இழுத்தான்.

“முடியும். உனது தந்தைக்கு இறைவன் மீது வைத்திருக்கும் பக்தி குறைய வேண்டும். அதற்கு உன் மீது அவருக்கு முழு நம்பிக்கை வரவேண்டும். என் பாரத்தை இனி என் மகன் பார்த்துக் கொள்வான் என நினைக்கும் சராசரி தந்தையாக அவர் மாற வேண்டும். நீ செய்யக் கூடியதெல்லாம் ஒரு மகனாக, மாணவனாக மாறுவதுதான். கல்லூரிக்குச் செல், வாழ்க்கையை படி, திருமண பந்தத்தில் இறங்கு, இயற்கை விதித்தபடி அடுத்த சந்ததியை உருவாக்கு. நேரம் கிடைத்தால் இயற்கையையும் இறைவனையும் நீ காப்பாற்றலாம்” என்று சிரித்தார்.

‘‘அப்படின்னா இறைவன், அருவி எல்லாத்தையும் மறந்திடவா?”

“அவையெல்லாம் நேற்றைப் போலவே இன்று இருக்கிறது, நாளையும் இருக்கும். நீ அதனருகே செல்லாமலே அத்துடன் நிரந்தரமாக வாழ முடியும். தினமும் கடவுளை தொழுது, அருவியில் குளிப்பதை கடமையாக செய்து கொண்டிருந்தால், உன்னால் அதை அனுபவிக்கவே முடியாது. உன் வீட்டில் மாட்டப் பட்டிருக்கும் எத்தனையோ கடவுள் படங்களுள் அதுவும் கவனிக்கப்படாத ஒன்றாகிவிடும். அதனால் இப்போதைக்கு உன் அப்பா சொல்வதை கேட்டு, அதன்படி நட... அதுதான் அவருக்கு நல்லது”

எல்லாம் புரிந்தது போன்று தலை யாட்டினான். எதுவும் பேசிக் கொள்ளாமல் சிற்றருவியைத் தாண்டி நடந்த தருணத்தில் நன்றாக விடியத் தொடங்கவே ஆட்கள் செண்பகா அருவியை நோக்கி செல்லத் தொடங்கினார்கள்.

“சாமி, நீங்க செண்பகா அருவி வரைக்கும் போகணுமா? இப்பவே நடக்க சிரமப் படுறீங்க...’’ என்று கேட்டான் வைத்தியநாதன்.

“செண்பகாதேவி மட்டுமல்ல, தேனருவியையும் தரிசிக்கப் போகிறேன், ஆனால் நீ செண்பகாதேவி அருவியுடன் விடை பெற்றுக் கொள்ளலாம்” என்றதும் சிரித்தான்.

“சும்மா சொல்லாதீங்க சாமி... நீங்களாவது தேனருவிக்குப் போறதாவது, இளவட்டப் பசங்களே போய் காலை உடைச்சிக்கிறாங்க, உசுர் போயிடுது. இத்தனை நாள் குற்றாலத்துல இருக்கேன், நானே பார்த்ததில்லை”

“தேன் அருவித் திரை எழும்பி வானின் வழி ஒழுகும்,
செங் கதிரோன் பரிக் காலும் தேர்க் காலும் வழுகும்.
கூனல் இளம் பிறை முடித்த வேணி அலங்காரர்
குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையே!” என்று வாய்விட்டு குற்றாலக் குறவஞ்சியைப் பாடினார் ஞானகுரு.

உரத்த குரலில் பாடுவதைக் கேட்டு, குளிப்பதற்காகப்




www.gyanaguru.com
www.gyanaguru.com

# மோட்சத்துக்கு போகும் வழி

“இந்த உலகில் ஒரு மனிதனைப் போன்று இன்னொரு மனிதன் இல்லை, ஒரு விலங்கைப் போன்று இன்னொரு விலங்கு இல்லை. இன்னும் சொல்லப் போனால் ஒரு மரத்தில் இருக்கும் லட்சக்கணக்கான இலைகளில் கூட, ஒன்று போல் ஒன்று இருப்பதில்லை”

போய்க் கொண்டிருந்த இளைஞர் பட்டாளம் ஒன்று ஞானகுருவுக்கு அருகே வந்தது. கல்லூரியில் இருந்து சுற்றுலா வந்திருக்கிறார்கள் என்பது புரிந்தது. அந்த கூட்டத்தில் நாலைந்து மாணவிகளும் இருந்தார்கள்.

“எங்களுக்கு இந்த பாட்டு பாடத்தில வந்திருக்கு...” என்று ஒரு மாணவி சந்தோஷப் பட்டாள்.

“அந்த பாடல் படிப்பதற்காக இல்லை, சுகமாக அனுபவிப்பதற்கு. முடிந்தால் மேலே போய் தேனருவியை தரிசித்து உண்மையை அறிந்து கொள்ளுங்கள்...” என்றபடி புகைத்துக் கொண்டிருந்த ஒரு பையனிடம் இருந்து, சிகரெட் கேட்டு வாங்கினார். சாமியார் என நினைத்து நின்ற சில இளைஞர்கள், பிச்சைக்காரனைப் பார்ப்பது போன்று முகம் சுளித்து, நடை போடத் தொடங்கினார்கள்.

ஒருசிலர் மட்டும் அதனை பொருட் படுத்தாமல் நின்றனர். சிகரெட்டை பற்றவைத்து ஆழமாக புகைத்த ஞானகுருவிடம், “நீங்க சாமியார்தான...” என்று ஒருவன் கேள்வி எழுப்ப, உடனே வைத்தியநாதன், “இவரை சாதாரணமா நினைச்சுடாதீங்க, மகாஞானி..” என்று சொல்லத் தொடங்கியவனை தடுத்து நிறுத்தி பேசினார் ஞானகுரு.

“நான் ஞானியல்ல... மகிழ்ச்சியாக வாழ்பவன். ஏனென்றால் ஆனந்தம்தான் இறைவன் வாழும் இல்லம். அந்த இறைவனைத்தான் தேடிக் கொண்டிருக் கிறேன்” என்று சிரித்தபடி சொன்ன பதில் அவர்களுக்குப் புரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனாலும், சாமியார் என்பது உறுதியாகவே கேள்விகளை வீசத் தொடங்கினார்கள்.

“நான் இந்த வருஷம் பாஸாவேனா?” என்று ஒரு மாணவன் அபத்தமாக கேட்டான்.

“ஃபெயில் ஆகலேன்னா பாஸாயிடுவே” என்று சொல்ல, மாணவிகள் சிரித்தார்கள்.

“பெரியவங்ககிட்ட விளையாட்டா கேட்காதீங்க...” என்று மாணவர்களைத் தடுத்து நிறுத்திய ஆசிரியர் ஒரு கேள்வி கேட்டார்.

“சாமி... பிரம்மச்சரியம், கிருஹஸ்தம், வனபிரஸ்தம், சந்நியாசம் போன்றவை மூலம் மோட்சம் அடையலாம்னு படிச்சிருக்கேன். இதுல எது உத்தமம்?”

“எதுவும் சரிப்படாது, ஏனென்றால்




இவையெல்லாம் வழிகளேயல்ல. பிரம்மச்சர்யம் மூலம் மோட்சத்தை அடைய முடியும் என்றால், பருவம் எய்தும் முன்னர் மரணமடையும் அத்தனை உயிர்களும் சொர்க்கத் திற்குப் போயிருக்க வேண்டும். கிருஹஸ்தர்கள் மோட்சம் அடைவார்கள் என்றால், இந்த உலகில் உள்ள குடும்பஸ்தர்கள் எல்லோருமே மோட்சத்துக்குத் தகுதியானவர்கள்தான்..

காட்டிற்குச் சென்று வனபிரஸ்தம் செய்தால் மோட்சம் பெறலாம் என்றால், அத்தனை மிருகங்களும், பறவைகளும் அதனை அடைந்திருக்க வேண்டும். சந்நியாசம் மூலம் அதனை பெற முடியும் என்றால் ஏழைகளும், பிச்சைக் காரர்களும் நேரடியாக சொர்க்கத்துக்குத்தான் போவார்கள்”

“அப்படின்னா மோட்சத்துக்கு எப்படி சாமி போறது?”

“ஏன்... திரும்பி உங்க ஊருக்குப் போக ஆசையில்லையா?” என்று ஞானகுரு கேட்டதும் இளசுகள் வாய்விட்டுச் சிரித்தார்கள். ஆசிரியர் அமைதியாக இருந்தார்.

“இல்லாத உலகத்தைத் தேடி, இருக்கும் உலகத்தை நரகமாக்கிக் கொள்ளாதீர்கள்.’ என்றார்.

“சாமி... கடவுளைப் பார்க்க முடியுமா?” என்று ஒரு மாணவன் மிகச் சாதாரணமாக கேட்டான்.

“இந்த உலகில் ஒரு மனிதனைப் போன்று இன்னொரு மனிதன் இல்லை, ஒரு விலங்கைப் போன்று இன்னொரு விலங்கு இல்லை. இன்னும் சொல்லப் போனால் ஒரு மரத்தில் இருக்கும் லட்சக்கணக்கான இலைகளில் கூட, ஒன்று போல் ஒன்று இருப்பதில்லை. இதற்கெல்லாம் காரணங்களைக் கண்டுபிடித்துக் கொண்டே போ... இறுதியில் கடவுளை நீ பார்க்கலாம்... பார்க்காமலும் போகலாம்”

“சாமி... இந்த மலையிலே அழகு மரம்னு ஒண்ணு இருக்காமே, அதோட பட்டையை அரைச்சுக் குளிச்சா வெள்ளையா மாறலாம்னு சொல்றாங்க... உங்களுக்குத் தெரியுமா?” ஒரு மாணவி ஆர்வமாகக் கேட்டாள்.

“ஒரு மரம் மட்டுமல்ல, எல்லா மரங்களும் அழகு மரம் தான், ஏனென்றால் அவை பியூட்டி பார்லருக்குப் போவதில்லை” என்றதும் அந்த மாணவியின் முகம் சுருங்கியது.

“மனிதர்கள் சிரிக்கும் போது, முகத்தில் தோன்றும் பொலிவுக்கு ஈடாக இதுவரை எந்த அழகுப் பொருட்களும் கண்டுபிடிக்கப் பட்டதில்லை, நீ எப்போதும் சிரிப்பை பூசிக்கொள்... அழகாகிவிடலாம்”

“சாமி... படிப்பு நல்லா வரணும்னா எந்த சாமியை கும்பிடணும்?” என்று ஒரு மாணவன் கேட்டான்.

“ஏதாவது ஒரு கழுதையை வணங்கு...”

“என்ன சாமி இப்படிச் சொல்றீங்க, கழுதைப் படத்தை கும்பிட்டா லாபம்தான வரும்னு சொல்வாங்க...?” கேலியை புரிந்துகொள்ளாமல் பதில் சொன்னதைப் பார்த்து புன்னகைத்தார் ஞானகுரு. அந்த புன்னகைக் கண்ட ஒரு மாணவி உஷாரானாள்.

“யேய்... கழுதைதான் பேப்பர் தின்னும். அதுக்காகச் சொல்றாருப்பா!” என்றவள் சீரியஸாகவே “சாமி, நிஜமாவே படிப்பு நல்லா வர என்ன செய்யணும்?” என்று கேட்டாள்.

“உங்களை ஒரு அறைக்குள் வைத்து பூட்டிய பின் ஒரு பாம்பை உள்ளே விட்டால் என்ன செய்வீர்கள்?”

“அதுகிட்ட கொத்துப்படாம தப்பிக்கப் பார்ப்போம்” என்றாள்.

“ஆம்... அப்படித்தான். பாம்பின் ஒவ்வொரு அசைவையும் துல்லியமாக கவனிப்பது போன்று பாடத்தைக் கவனியுங்கள். முழு கவனத்தையும் பாடத்தில் செலுத்துங்கள். பாடம் கேட்கும்போதே மனதில் பதிந்து விடும்”

“சாமி எங்களுக்கு ஏதாவது மாயவித்தை செஞ்சு காட்டுங்களேன்?” என்று கேட்டான் ஒருவன்.

“ஒவ்வொரு அமாவாசையிலும், சுடுகாட்டில் தலைச்சன் பிள்ளை மண்டையோட்டை தேடியெடுத்து, அதற்கு ரத்த பலி கொடுக்க வேண்டும். பின்னர் அந்த ரத்தம் உறைந்து போவதற்குள் அதில் மஞ்சள், அரிசி, தேங்காய் கலந்து, அர்த்தஜாமத்தில் காளி பூஜை செய்து... அதை சாப்பிட்டால் மாய வித்தைகள் கைவரும். ஆனால், அந்த சக்திகள் அடுத்த அமாவாசை வரைக்கும் மட்டுமே தாக்குப் பிடிக்கும். நான் நீண்டநாளாக அமாவாசை பூஜை நடத்தவில்லை... உங்களில் யாராவது தலைப்பிள்ளை இருக்கிறீர்களா..? வசிய மை தடவினால் போதும், எங்கிருந்தாலும் அமாவாசையன்று இங்கே வந்து விடுவீர்கள்?’ நீ தலைச்சனா” என்று ஒரு மாணவனை ஏறெடுத்துப் பார்த்தார்.

**- வருவார் ஞானகுரு**

## மந்திரச்சொல்

தோல்விகளுக்கான காரணங்களைக் கண்டறியாதவர்களால் வெற்றியைத் தொட முடியாது.



# மனவளர்ச்சி குன்றியவர்களை கொன்று விடலாமா..

புத்தர் அருளிய போதனைகளில் முதன்மையானவை, ஐந்து நல்லொழுக்கப் போதனைகள். உயிர்களைக் கொல்லக்கூடாது என்பது முதல் போதனை. திருடக்கூடாது என்பது இரண்டாவது போதனை. சோரம் போவதை தவிர்ப்பது மூன்றாவது போதனை. பொய் சொல்லக்கூடாது என்பதும், போதை பொருட்களை தவிர்ப்பதும் அடுத்த இரண்டு போதனைகள். இந்த போதனைகளில் எழும் சந்தேகங்களும் அதற்கான விளக்கங்களும் பௌத்தத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

**? உயிர்களைக் கொல்வது தவறு என்கிறீர்கள். ஆனால், நோய் பரப்பும் கிருமியைக் கொல்வதும், நம்மை கொல்லவரும் எதிரியைக் கொல்வதும் தவறு இல்லைதானே..?**

! நோய்க் கிருமியைக் கொல்வதும், கொலை செய்ய வருபவரைக் கொல்வதும் நிச்சயமாக உங்களுக்கு நன்மையளிக்கலாம். ஆனால், அந்த நோய்க் கிருமிகளுக்கு அல்லது அந்த கொலை செய்ய வருபவருக்கு எப்படி நன்மையளிக்கும்? உங்களைப் போலவே அவையும் உயிர் வாழ விரும்புபவை தானே..? நோயைப் பரப்பும் கிருமிகளைக் கொல்ல வேண்டும் என்ற உங்கள் எண்ணத்தில் உங்கள் மீது மட்டுமே அக்கறை உள்ளது. அந்த கிருமிகள் மீது கெட்ட எண்ணத்துடன் செயல்படுகிறீர்கள் என்பதால் உங்கள் செயல் நிச்சயம் அந்த கிருமிகளுக்கு நன்மை அளிக்காது. எனவே, எவற்றையும் கொல்வதை பௌத்தம் ஏற்பதில்லை.

**? ஆனால் ஒரு பெண் பாலியல் கொடூரத் துக்கு ஆளானால் அல்லது அங்கக் குறைபாட்டுடன் பிறக்கப்போகிறது என்பது தெரியவந்தால் அக்கருவைக் கலைப்பது சரியான முடிவல்லவா?**

! மற்ற குழந்தைகளைப் போலவே பாலியல் வன்கொடுமையினால் பிறக்கும் குழந்தைக்கும் வாழ்வதற்கும், அன்பையும் பாசத்தையும் எதிர்ப்பார்ப்பதற்கும் உரிமை உள்ளது. உயிர் கொடுத்த தந்தை செய்த குற்றத்திற்காக அக்கருவை அழிப்பது முறையல்ல. உருவக் குலைவுடனோ மன வளர்ச்சி குன்றியோ குழந்தை பிறக்குமேயானால் அதுபெற்றோர்களுக்கு மிகுந்த அதிர்ச்சி தருவது இயல்பே. அத்தகைய கருவைச் சிதைப்பது சரியென்றால் அங்கக் குறைபாட்டுடன் அல்லது மனவளர்ச்சி குன்றியவர்களை அல்லது முதியவர்களைக் கொல்வதும் சரியென்று ஆகிவிடாதா?

தாயின் உயிரைக் காப்பாற்ற வேண்டியது போன்ற இக்கட்டான சூழ்நிலைகளில், கருச்சிதைவு செய்வது கருணையுள்ள மாற்று வழியாகத் தோன்றலாம். ஆனால், உண்மையில், பெரும்பான்மையான கருச்சிதைவு செய்வதன் நோக்கம் - பிரசவத்தால் வாழ்க்கையில் சிக்கல் ஏற்பட்டுவிடலாம் என்பதாலும், தர்ம சங்கடமான சூழ்நிலையில் கருவுற்றதாலும், அல்லது பெற்றோர் குழந்தை பெறுவதைத் தள்ளிப்போட முடிவு செய்வதாலும் தான். பௌத்தர்களுக்கு உயிரைச் சிதைப்பதற்கு இவை சரியான காரணங்களாகத் தோன்றாது.

**? இரண்டாம் நல்லொழுக்கப் போதனை அவசியமா..?**

! இந்த ஒழுக்கத்தை ஏற்றுக் கொண்டால் நமதல்லாத எப்பொருளையும் எடுப்பதைத் தவிர்க்கிறோம். பேராசையைக் கட்டுப்படுத்தி மற்றவர் உடைமைக்கு மதிப்புத் தரும் இரண்டாம் நல்லொழுக்கப் போதனை மிகவும் முக்கியமானதே.

**? மூன்றாம் நல்லொழுக்கப் போதனையான தவறான பாலியல் உறவுகள் என்றால் என்ன?**

! வஞ்சனை செய்து, செல்வாக் கைப் பயன்படுத்தி, ரகசியங்களை வெளியிடுவதாக அச்சுறுத்தி அல்லது பலாத்காரப்படுத்தி உடலுறவு கொள்ள வைத்தால் அது தவறான பாலியல் உறவு. விபசாரமும் ஒரு வகைத் தவறான பாலியல் உறவே. ஏனெனில் ஒருவரை

www.gyanaguru.com

மணம் புரியும்போது அவரிடம் விசுவாசத் தோடு இருப்போம் என்று சத்தியம் செய்கிறோம். விபசாரத்தில் ஈடுபட்டால் அந்த சத்தியத்தை மீறி நமது வாழ்க்கைத் துணையை ஏமாற்றுகிறோமல்லவா? உடலுறவு என்பது இருவரிடையே உள்ள நெருங்கிய நட்பையும் அன்பையும் உறுதி செய்வதாக அமைய வேண்டும். அப்படி அமைந்தால் அது நமது மனத்திற்கும் மன உணர்வுகளுக்கும் நன்மை புரிகிறது.

**?திருமணத்திற்கு முன் உடலுறவு கொள்வது தவறான பாலியல் உறவா?**

!இருவருக்குமிடையே அன்பும், அன்னியோன்ய உடன்பாடும் இருந்தால் அது தவறான பாலியல் உறவு அல்ல. ஆனால், உடலுறவின் முக்கிய நோக்கமே இனப்பெருக்கம் செய்வது தான். அப்படி இருக்க, திருமணமாகாத பெண் கர்ப்பமுற்றால், பல சிக்கல்கள் ஏற்படக்கூடும். எனவே உடலுறவை திருமணத்திற்குப் பிறகு வைத்துக் கொள்வதுதான் சரி.

**?திருமணமான ஒருவன் திருமணமாகாத ஒரு பெண்ணுடன் பாலியல் உறவு வைத்திருந்தால் அவன் மூன்றாம் நல்லொழுக்கப் போதனையைக் கடைப் பிடிப்பதில்லை. ஆனால் அவளும் கடைபிடிப்பதில்லை என்று கூற முடியுமா?**

!ஒரு செயல் சரியானதா தவறானதா என்று தீர்மானிப்பது செய்வோரின் நோக்கம் தான். அந்தப் பெண்ணுக்கு அவன் திருமணம் ஆனவன் என்பது தெரியவில்லையென்றால் அவள் நல்லொழுக்கப் போதனையை முறிப்பதில்லை. ஆனால் அவளுக்கு அவன் திருமணமானவனாக இருக்ககூடும் என்ற ஐயம் இருந்தும், தன் பொறுப்பைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கத்தோடு அதைப் பற்றி அவனிடம் கேட்காமலே இருந்தால் நல்லொழுக்கப் போதனையை மீறவில்லையென்றாலும் நல்ல எண்ணத்தோடு நடந்து கொள்ளாததால் நன்மையற்ற கர்ம வினை செய்தவளாகிறாள். முன் சொன்னது போல எந்த ஒரு செயலிலும் நூறு சதம் நல்லதும் இல்லை; நூறு சதம் கெட்டதும் இல்லை. நாம் செய்யும் பல செய்கைகள் நல்லதும், கெட்டதும், இரண்டும் அல்லாததுமாகக் கலந்து இருக்கின்றன. நாம் எப்போதும் நேர்மையோடும், உண்மையாகவும் ஏமாற்றாமலும் நடந்து கொள்ளவே முயற்சிக்க வேண்டும்.

**?பொய் சொல்லாது வாழ்வது சாத்தியமாகுமா?**

!சமூகத்தில் பொய் சொல்லாமல் வாழவோ ஒரு வணிகத்தைச் செய்யவோ முடியாது என்ற நிலை நிலவுமானால், அத்தகைய திகைப்பூட்டும் நேர்மையற்ற, வெறுக்கத்தக்க முறையை மாற்றி அமைத்தாக வேண்டும். பௌத்தர்கள் நடைமுறைக்குச் சாத்தியமானவற்றைச் செய்வதிலும், பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் உண்மையாகவும் நேர்மையாகவும் இருப்பதையே விரும்புகின்றனர்.

**?ஐந்தாம் நல்லொழுக்கப் போதனை நம்மை மது அருந்தவோ, பிற போதைப் பொருட்களைப் பயன் படுத்தவோ கூடாது எனக் கூறுகிறது. ஏன்?**

!பொதுவாக மனிதர்கள் சுவைக்காக மது அருந்துவதில்லை. அவர்கள் தனிமையில் குடிப்பது, தங்கள் பதட்டத்தைத் தணித்துக் கொள்ளவே. மற்றவர்களுடன் சேர்ந்து குடிப்பது பெரும்பாலும் அவர்களுடன் ஒத்துப் போகவே; சிறிதளவு குடிப்பது கூட நினைவை மறக்கடித்துக் கவனத்தைப் பிறழச் செய்கிறது. அதிகமாகச் சாப்பிட்டு விட்டாலோ, அவனையே பாழ்படுத்தி விடுகிறது. ஐந்தாம் நல்லொழுக்கப் போதனையை மீறினால் மற்ற அனைத்து ஒழுக்கப் போதனைகளையும் மீறுவது எளிதாகிவிடுகிறது என்று பௌத்தர்கள் கூறுவார்கள்.

**?ஆனால், சிறிதளவு மது குடிப்பது பாதிக்காதே...?**

!ஆமாம். குடிப்பது சிறிதளவுதான். உங்களால் இந்தச் சிறிதளவு கூட ஒழுக்கத்தைக் காப்பாற்ற முடியாவிட்டால் உங்கள் வாக்குறுதியிலும் தீர்மானத்திலும் வலிமை இராதல்லவா?

**?அந்த ஐந்து நல்லொழுக்கப் போதனைகளும் எதிர்மறையானவை! அவை இவற்றைச் செய்யாதே என்றுதான் கூறுகின்றன. இவ்விவற்றைச் செய் என்று கூறவில்லையே?**

!அந்த ஐந்து நல்லொழுக்கப் போதனைகளும் பௌத்த சமய அடிப்படை ஒழுக்க நெறிகளாகும். அவை பௌத்தத்தின் முழுமையான போதனைகளல்ல. நாம் நமது தீய வழக்க ஒழுக்கங்களையுணர்ந்து, அவற்றைத் தவிர்ப்பதற்குக் கடுமையாக முயல்கின்றோம். அதற்காகவே, அவ்வைந்து ஒழுக்கங்களும் போதிக்கப்பட்டன. தீமை செய்வதை நிறுத்திவிட்டோமேயானால், நன்மை செய்ய ஆரம்பித்து விடுவோம். சான்றாக நான்காவது நல்லொழுக்கப் போதனையை எடுத்துக் கொள்ளுங்கள். புத்தபெருமான் கூறுகிறார், "பொய் சொல்வதைத் தவிர்ப்பதிலிருந்து ஆரம்பியுங்கள்" என்கிறார். பிறகு நாம் உண்மை பேசவேண்டும்; பண்புடன் பேசவேண்டும்! மரியாதையாகப் பேசவேண்டும்; மேலும் பேசவேண்டிய நேரத்தில் மட்டுமே பேச வேண்டும்.

**புத்தர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:**

"ஒருவன் பொய்யுரையைத் தவிர்த்து விட்டாலே, அவன் உண்மை பேசுபவனாகிவிடுகிறான்; நம்பகமானவனாகி விடுகிறான், பொறுப்பானவனாகி விடுகிறான்; எவரும் அவனை நம்பி வாழலாம். அவன் இவ்வுலகத்தை ஏமாற்ற மாட்டான். தீய எண்ணங் கொண்ட வார்த்தைகளை அவன் என்று விட்டு விட்டானோ, அன்றே அங்கு பேசுவதை இங்கும், இங்கு பேசுவதை அங்கும் புனைந்து, புறங்கூற மாட்டான். அவன் பிரிந்திருப்பவர்களை ஒன்று சேர்ப்பான்; நண்பர்களை மேலும் நெருங்கிய நண்பர்களாக்குவான்; ஒற்றுமையே அவனது மகிழ்ச்சி; ஒற்றுமையே அவனது தெளிவு; ஒற்றுமையே அவனது அன்பு; அவனது பேச்சுக்களின் நோக்கமே இவைதாம்: கடுஞ்சொற்களைத் தவிர்த்தல்; அவனது சொற்கள் குற்றமற்றவை; குறையற்றவை; காதுகளுக்கு இனிமையானவை; எல்லாராலும் ஏற்று கொள்ளக் கூடியவை; உள்ளத்தைத் தொடுபவை; நாகரிகமானவை; எல்லாராலும் விரும்பப்படுபவை; பயனற்ற பேச்சைத் தவிர்த்துச் சரியான நேரத்தில், சரியானவற்றை மட்டுமே அறத்தைப் பற்றியும் ஒழுக்கத்தைப்பற்றியும் பேச வேண்டியவை பற்றிமட்டுமே பேசுவான். அவன் பேசுஞ் சொற்கள் புதையலைப் போன்று காக்க வேண்டியவை; காலத்துக்குகந்தவை; சரியான காரணங்களுடையவை; எதை விளக்க வேண்டுமோ, அதைமட்டும் மிகச்சரியாக விளக்குபவை.







# இம்புட்டுத்தான் நம்பிக்கை

மருத்துவமனையில் கொடுத்திருந்த தன்னுடைய ரத்த பரிசோதனை ரிப்போர்ட் வாங்கச் சென்றான் அருண். அவனுடைய ரிசல்ட் மருத்துவரிடம் இருப்பதாகவும், அவரை சந்திக்குமாறும் ஊழியர் தெரிவித்தார். ஆகவே, மருத்துவரை சந்திக்கச் சென்றான்.

அருண் என்று பெயரைச் சொன்னதும் மருத்துவர் அவனை வரவேற்று அமர வைத்தார். அவனுடைய பரிசோதனை முடிவுகளை கையில் எடுத்துக்கொண்டு மீண்டும் ஒரு முறை ஆழமாகப் படித்தார். அதன்பிறகு குடும்பம் பற்றி விசாரித்தார். என்ன வேலை, பொழுதுபோக்கு என்றெல்லாம் என்னென்னவோ பேசினார்.

‘‘டாக்டர்... ரிசல்ட்டில் ஏதோ ஆபத்தான நோய் அறிகுறி இருக்கிறது என்று நினைக்கிறேன். தயக்கமே இல்லாமல் நீங்கள் என்னிடம் நேரடியாகவே சொல்லலாம்...’’ என்று அருண் கேட்டான்.

உடனே வாய்க்குள் நுழையாத ஒரு நோயின் பெயரைச் சொல்லிவிட்டு, ’’நீங்கள் அதிகபட்சம் இன்னமும் 6 மாதங்கள் மட்டுமே உயிர் வாழ முடியும்...’’ என்று சொன்னார். அந்த செய்தி அருணுக்கு உண்மையிலே பேரதிர்ச்சி. ஏனென்றால், இப்போதுதான் அவனுக்கு இரண்டாவது குழந்தை பிறந்திருந்தது. மனைவி குடும்பத் தலைவியாக வீட்டில் இருக்கும் ஒரு சாதாரண பெண். ஆகவே, திடீர் மரணம் குடும்பத்திற்கு பேரிடியாகவே இருக்கும் என்பதை உணர்ந்தான்.

அதன்பிறகும் அந்த மருத்துவர் ஏராளமான தகவல்கள் தெரிவித்தார். சரியாக மருந்துகள் எடுத்துக்கொள்ள வேண்டும், அதிர்ச்சியான செய்திகளைக் கேட்கக்கூடாது, முடிந்த வரையிலும் மலை பிரதேசங்களில் வசிக்க வேண்டும் என்றெல்லாம் ஆலோசனைகள் சொன்னார். என்னவெல்லாம் சாப்பிடலாம், எதையெல்லாம் சாப்பிடக் கூடாது என்றும் பட்டியல் போட்டார்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் விலாவாரியாக பேசிவிட்டு, ‘‘சரி, நீங்கள் நம்பிக்கை இழக்காதீர்கள்... அடுத்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்..?’’ என்று ஆர்வமாகக் கேட்டார்.

இதற்குள் அருண் தெளிவாகி இருந்தான். ஆகவே கொஞ்சமும் தயங்காமல் அருண், ‘‘இன்னும் ஒரு சிறப்பு மருத்துவரை பார்க்கப் போகிறேன்...’’ என்று புன்னகையுடன் கிளம்பினான்.

இதுதான் நம்பிக்கை. இப்படித்தான் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டும். முடிவை எண்ணி எதையும் நினைத்து பயந்துவிடக் கூடாது. ஏனெனில், அது ஒரு திருப்பமாக இருக்கக்கூடும்.

ஆகவே, சிக்கல்களைக் கண்டு அச்சப்பட வேண்டாம். எதிர்த்து நில்லுங்கள். வழி கிடைக்கவே செய்யும்.










































































# மகிழ்ச்சிக்கு ரூ.500/-

ஞானகுரு மகிழ்ச்சி மின்னிதழுக்கு ஒவ்வொரு மாதமும் விமர்சனங்கள், பாராட்டுகள் அதிகரித்து வருவது, மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. மக்களிடம் மகிழ்ச்சி, அன்பு, நிம்மதி, ஆறுதல் போன்ற வற்றை பரப்பு வதையே ஞானகுரு மகிழ்ச்சி இதழ் நோக்கமாகக் கொண்டுள்ளது. வணிக நோக்கமற்று வெளியிடப்படும் இந்த மின்னிதழ் மற்றும் ஞானகுரு இணையதளம் (gyanaguru.com) இயங்குவதற்கு உங்களால் உதவ இயலும்.

இந்த மின்னிதழை உங்களுக்குத் தெரிந்த அனைவருக்கும், மற்ற குழுவினருக்கும் பகிர்ந்து, அவர்களையும் மற்றவர்களுக்கு பகிரச் செய்யுங்கள். இதுதவிர, மின்னிதழுக்கு ஆண்டு சந்தா 500 ரூபாய் என்று முடிவு செய்யப் பட்டுள்ளது. அதேநேரம், இதனை சந்தா கொடுப்பவர்கள் மட்டுமே படிக்க இயலும் வகையில் கட்டமைக்கவில்லை என்பதால், எப்போதும் போல் எல்லோரும் ஞானகுரு மகிழ்ச்சி இதழை படிக்கவும், பரப்பவும் முடியும். எனவே, விருப்பம் உள்ளவர்கள் கீழ்க்கண்ட அலைபேசி எண்ணுக்கு அல்லது வங்கிக் கணக்கிற்கு ஆண்டு சந்தா 500 ரூபாய் அனுப்பிவையுங்கள். பணம் அனுப்பியவர்கள், தங்கள் பெயர், முகவரியை கீழ்க்கண்ட செல்போன் எண்ணுக்கு வாட்ஸ் ஆப் மூலம் அனுப்ப வேண்டுகிறோம். இது, மகிழ்ச்சிக்கு அதிக மகிழ்ச்சி தரும்.

சந்தா செலுத்துபவர்கள் ஞானகுரு ஆறுதல் மையத் தில் உறுப்பினராக முடியும். குறிப்பிட்ட எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இணைந்ததும், ஆறுதல் மையம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளிவரும்.

நன்றி.

**GPAY : +91 72997 53999**



www.gyanaguru.com




? விதியை மதியால் வெல்ல முடியுமா?

**- எம்.முருகானந்தம், சிதம்பரம்.**

**ஞானகுரு :**

விதிச்சது நடக்கும், விதிக்காதது நடக்காது என்பார்கள். விதியை மதியால் வென்றால், அதையும் விதிப்படி நடந்ததாகவே சொல்வார்கள். இவை எல்லாமே தோல்வி அடைந்தவர்களின் கற்பிதங்கள் மட்டுமே. அட்சரேகை, கடகரேகை போன்றவை மனிதனின் வாழ்வியலுக்காக உருவாக்கப்பட்ட கற்பனைக் கோடுகள் என்பது போலவே, விதி என்பதும் மனிதர்களின் கற்பனையே. இந்த தெளிவு இருப்பவர்களால் மட்டுமே வானத்தில் ஏறி பறக்க முடியும்.

# ஞானகுரு பதில்கள்



? கடவுளை சென்றடையும் வழி என்ன?

**- பி.சின்னராஜ், பொள்ளாச்சி.**

**ஞானகுரு :**

கடவுளை அடைந்து என்ன சாதிக்க ஆசைப்படுகிறீர்கள்..? வாழ்வதற்காகவே இந்த பூமிக்கு பிறந்து வளர்ந்துள்ளீர்கள். இயற்கை இட்டிருக்கும் கட்டளையை செவ்வனே நிறைவேற்றுங்கள். கடவுள் என்று ஒருவர் இருந்தாலும், இதுவே அவரிடம் சென்று சேரும் சரியான வழியாக இருக்கும்.

? பணத்தை அதிகம் விரயம் செய்வது ஆணா... பெண்ணா?

**- டி.கதிரேசன், நடுவப்பட்டி, மேல்மருவத்தூர்.**

**ஞானகுரு :**

ஆடம்பரத்துக்கு ஆசைப்படுபவர்களில் ஆண், பெண் என்ற பாலின பேதம் கிடையாது. பெரும்பாலும் மாத சம்பளத்துக்காரர்கள் கணக்கு பார்த்தே செலவழிக்கிறார்கள். பெரிய ஹோட்டலில் சாப்பிடுவதை ஒருவர் விரயம் என்று நினைப்பதால் மட்டுமே அது உண்மையாகிவிடாது. பொதுவாக கைக்கு மீறிய பணம் வரும்போதே விரயம் ஆரம்பமாகிறது.





? துன்பத்திற்கு காரணம் ஆசை என்று புரிந்தாலும் ஆசையைக் கட்டுப்படுத்த முடியவில்லையே..?

**- பி.எழிலரசி, வேட்டுவணூர்.**

**ஞானகுரு :**

ஆசையை கட்டுப்படுத்த முடியதில்லை என்றால் திசை திருப்பலாம். லட்டு தின்பதற்கு விருப்பம் வரும் தருணத்தில் கடலை மிட்டாய் எடுத்துக்கொள்ளுங்கள். மிகப்பெரிய ஆசைகளே மிகவும் துன்பம் தரக்கூடியவை. எனவே, சின்னச்சின்னதாக ஆசைப்படுங்கள். சின்ன ஆசைகள் எளிதில் நிறைவேறிவிடும் என்பதால், அங்கே ஏமாற்றத்துக்கு இடமே இல்லை. சின்ன ஆசைகளை நிறைவேற்றி மகிழவில்லை என்றால், இந்த உலகை ரசித்து வாழ்வதற்கான காரணம் காணாமல் போய்விடும்.

www.gyanaguru.com





? யாரெல்லாம் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள்?

**- சி.கனகசபை, திருச்சி.**

**ஞானகுரு :**

மகிழ்ச்சி என்பது பிறரிடமோ அல்லது ஏதேனும் பொருட்களிடமோ இல்லை என்ற உண்மை தெரிந்த மனிதர்கள் மட்டுமே மகிழ்ச்சியாக வாழ முடியும். மகிழ்ச்சியை தனக்குள் தேடிக் கண்டுபிடிப்பவர்களால் மட்டுமே துன்பத்திலும், தோல்வியிலும், அவமானத்திலும் மகிழ்ச்சி அடையமுடியும். சின்ன விபத்து ஏற்படும் நேரத்தில், 'நல்லவேளையாக உசுர் தப்பிச்சிட்டோம்...' என்று குதூகலம் அடைபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

? துணிச்சல், தன்னம்பிக்கை எனும் இரண்டில் எது ஒருவனை சாதனையாளராக மாற்றக்கூடியது?

**- எம்.மகேந்திரன், சூலூர்**

**ஞானகுரு :**

தன்னால் நீச்சலடித்து மறு கரையை அடையமுடியும் என்று நம்புபவனே ஆற்றில் குதிப்பான். அந்த நம்பிக்கை உள்ளவனுக்கே துணிச்சல் இருக்கும். நம்பிக்கையும் துணிச்சலும் சேரும்போதே வெற்றி கிடைக்கும். அதேநேரம், தன்னுடைய தகுதி அறியாத அசட்டுத் துணிச்சல் ஆபத்தை வரவழைக்கும்.



? நாகரிகம் வளராதிருந்தால் இன்று எப்படி இருக்கும்?

**- ஏ.ராஜலட்சுமி, திருமங்கலம்.**

**ஞானகுரு :**

இப்போது நாகரிகம் வளர்ந்துவிட்டது என்று யார் சொன்னது? இன்னும் 50 வருடங்கள் கழித்த தலைமுறையினர், இன்றைய வாழ்க்கை முறையை கேலியாகப் பார்த்து சிரிப்பார்கள் என்பதே உண்மை. எனவே, நாகரிகம் வளர்ந்துவிட்டதாக நினைப்பதில் எந்த உண்மையும் இல்லை.

? இறைவன் மீது பக்தியும் நம்பிக்கையும் வைப்பது வாழ்க்கை சங்கடங்களைத் தீர்ப்பதற்கு உதவுகிறதே..?

**- எஸ்.மாரிகுமார், ஸ்ரீரங்கம்**

**ஞானகுரு :**

தலைவலி, காய்ச்சல் என்று எந்த ஒரு நோய் வந்தாலும் மருத்துவரை சந்தித்து அத்தனை பிரச்னைகளையும் சொல்கிறார்கள். மருத்துவரும் மருந்து, மாத்திரைகள் எழுதித் தருகிறார். அதனை நம்பிக்கையுடன் சாப்பிட்டு உடல் நலம் அடைகிறார்கள். இதனை அப்படியே பக்திக்குப் பொருத்திப் பாருங்கள். கடவுளிடம் உங்கள் நோய் பற்றியும் வேதனைகள் பற்றியும் எடுத்துச் சொல்கிறார்கள். அவர் கேட்டுக்கொள்கிறார் என்றே நம்புகிறார்கள். ஆனால், அது மட்டுமே நோயை தீர்த்துவிடும் என்று யாரும் நம்புவதில்லை. எத்தனை பெரிய பக்திமான், ஞானி என்றாலும் கடவுளிடம் கோரிக்கை வைத்துவிட்டு, அப்படியே மருத்துவமனைக்குப் போயே சிகிச்சை எடுத்துக்கொள்கிறார்கள். இதில் பக்திக்கு என்ன அவசியம் இருக்கிறது..?



www.gyanaguru.com

## ? உறவினர்களிடம் உரிமையை எதிர்பார்ப்பது சரியா?

– எஸ்.செளந்திரராஜன், போடி

**ஞானகுரு :**

உறவுகள் என்பது சாலைப் பயணத்தில் தென்படும் மோட்டல்கள் போன்றவை. சில இடங்களில் மோசமான அனுபவம் கிடைக்கலாம் என்றாலும், இளைப்பாறுதலுக்கும் ஓய்வுக்கும் தேவையான ஒன்றுதான். சில நிமிடங்களில் அங்கிருந்து கிளம்பிவிடுவது போன்று அன்பு, ஆனந்தம், துன்பத்தை பகிர்வதற்கான இணைப்பு பாலமாக மட்டுமே உறவுகளை வைத்துக்கொள்வது போதுமானது. கூடுதலாக உரிமை எடுப்பதும், கொடுப்பதும் விரும்பத்தகாத விளைவுகளையே உருவாக்கும்.




## ? வாழ்க்கையை ரசித்து வாழ்வது எப்படி..?

– எம்.அம்பிகா மோகன், மருளுத்து.

**ஞானகுரு :**

வாழ்க்கையை ஒரு பந்தயமாகவே மனிதர்கள் வாழ்கிறார்கள். பிறப்புக்கும் இறப்புக்கும் நடுவில் போட்டி போட்டுக்கொண்டே இருக்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் அதிக மதிப்பெண் பெறுவதற்கு போட்டி. திருமணம் முடிப்பதற்கு போட்டி. நிறைய சம்பாதிக்கப் போட்டி. பிள்ளை பெறுவதற்குப் போட்டி. கடைசியாக நோயுடன் போட்டி போட்டு மரணத்திடம் தோற்றுப் போகிறார்கள். இந்த போட்டி மனப்பான்மை இருப்பதால் படிப்பதில், திருமண வாழ்க்கையில், வேலையில் கிடைக்கும் மகிழ்ச்சியை அனுபவிக்கத் தெரிவதில்லை. அக்கம்பக்கத்தில் யாரையும் திரும்பிப் பார்க்காமல், தாங்கள் விரும்புவதை செய்வதுதான் ரசித்து வாழ்வதற்கான வழி. யாரிடமும் ஆலோசனை கேட்காமல், பிறருக்குப் பிடிக்குமா என்று யோசிக்காமல், தங்களுக்குப் பிடித்த நிறம், டிசைனில் புதிய ஆடை வாங்கும் மனநிலையே ரசித்து வாழும் கலை. இதனை உணவு தொடங்கி ஓய்வு வரையிலும் கடைபிடிக்கத் தொடங்கிவிட்டால், எல்லோரும் ரசித்து வாழ முடியும்.





## ? மனக்குழப்பத்தில் இருந்து விடுபட என்ன செய்யலாம்?

– எஸ்.பரந்தாமன், லட்சுமி நகர்.

**ஞானகுரு :**


மனம் குழப்பத்தில் இருப்பதை ஏற்றுக்கொள்வதே சிக்கலைத் தீர்ப்பதற்கான முதல் படி. யாரேனும் ஒருவரிடம் மனம்விட்டுப் பேசுவது அடுத்த படி. இதைவிட மோசமான பிரச்னைகளுடன் லட்சோப லட்சம் மக்கள் இருக்கிறார்கள் என்பதை அறிந்து நிம்மதி அடைவது மூன்றாம் படி. இந்தக் குழப்பமும் விரைவில் தீர்ந்துபோகும், குழப்பம் இருக்கும் வரை எந்த முடிவும் எடுப்பதில்லை என்ற உறுதியான முடிவுக்கு வருவது அடுத்த படி. கொஞ்சம் தள்ளி நின்று பார்க்கும்போது, எந்த குழப்பமும் பெரிதாகத் தெரிவதில்லை. தூக்கிப் போடுங்கள்.

## ? ஆனந்தம் தருவது ஆடம்பரமா அல்லது சிக்கனமா..?

– பி.முத்தரசு, வேலூர்.

**ஞானகுரு :**

நாய்க்கு தன் வாலைக் கடிப்பதுதான் அதிக ஆனந்தம். அதற்கு என்ன செலவாகப்போகிறது?









## கவித்துவம்

தட்டட்டும் என்று ஒருவரும்,
திறக்கட்டும் என்று மற்றொருவரும்,
தாழிடப்படாத கதவின் இருபுறமும்
யுகம் யுகமாக.....!!!

– ரதிராஜ்

# குடும்பத்துல சண்டையெல்லாம் சாதாரணமப்பா...

## அத்தியாயம்-24

ஆழ்மனமே தாழ் திறவாய்!

என்ன விதை போடுகிறோமோ, அதுவே செடியாக முளைத்து பலன் கொடுக்கிறது. ஒரு மனிதர் ஆழ்மனதில் என்ன நினைக்கிறாரோ, அதுவே அவரது குணமாக மாறி வாழ்க்கை முழுவதும் வழி நடத்துகிறது. இந்த உலகத்தில் கோபமாகப் பேசினால்தான் செல்லுபடியாகும் என்று நம்புபவர், எல்லா இடங்களிலும் கோபத்தைக் காட்டுகிறார். பணம் இருந்தால்தான் வாழமுடியும் என்று நம்புபவர் பணத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். எல்லோரையும் அனுசரித்து நடக்க ஆசைப்படுபவர், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் வாழ்கிறார்.

எனவே, பிறருடன் எப்படி பழக வேண்டும் என்பதை அவரவர் மனதுக்குள் முடிவெடுத்த வழியில் செயல்படுத்துகிறார்கள். அதனால்தான் பாசம் காட்டும் மகளாக, அன்பு மனைவியாக, நல்ல அம்மாவாக இருக்கும் ஒரு பெண்ணால் மருமகளிடம் மட்டும் கொடுமைப்படுத்தும் மாமியாராக முகம் காட்ட முடிகிறது. இதன் அர்த்தம் மாமியாரின் அடிமனதில் குரூரத்தன்மை ஒளிந்திருக்கிறது என்பதுதான். பிறரை கொடுமைப்படுத்தி ரசிக்கும் குரூர ஆசை எல்லோருக்குமே ஆழ்மனதில் இருக்கிறது என்றாலும், அதை வெளிக்காட்ட மாட்டார்கள். அதேநேரம், தங்களுக்கு ஏற்ற நேரமும், இடமும், நபரும் கிடைக்கும்போது குரூர முகத்தை வெளியே காட்டுகிறார்கள். அமைதியான ஒரு நபருக்கு அலுவலகத்தில் உயர் பதவி கிடைத்ததும், அதிகாரத்தை அதீதமாக காட்டும் நபராக அவர் மாறுவதற்கும் காரணம் இதுதான்.

சின்ன வயதிலேயே இந்த மனப்பான்மை தொடங்கிவிடுகிறது. சக மாணவர் மீதான பொறாமையால் ஆசிரியரிடம் பொய் சொல்லி தண்டிக்கச் செய்வது, தன்னை காதலிக்காத பெண் வேறு எவருக்கும் கிடைத்துவிடக் கூடாது என்று முகத்தில் ஆசிட் அடிப்பது, சந்தேகம் காரணமாக மனைவியை அடிப்பது போன்றவையும் இந்த ரகம்தான். ஜாதிக்காக ஆணவக் கொலை செய்தவர்கள், அதற்காக வருந்தாமல் அதை ஒரு சாதனையாக பெருமைப்படுவதும் அவர்களுடைய ஆழ்மன குரூரமே.

தங்களுக்குக் கீழ் பணியாற்றும் ஊழியர்களிடம், ‘எந்த நேரமும் உங்கள் வேலை பறிபோகலாம்..’ என்று அவர்களை பதட்டத்திலேயே வைத்திருப்பது, ’முன்பு ஸ்லிம்மா க்யூட்டா இருப்பீர்கள், இப்போது சதை போட்டு விட்டீர்கள்’ என்று இளம் பெண்களை வெறுப்பேற்றுவது, குடும்ப விழா சிறப்பாக நடக்கும்போது வேண்டுமென்றே ஏதேனும் பிரச்னையைக் கிளப்பி அமைதியைக் குலைப்பது போன்றவைகளும் பிறர் வேதனையைக் கண்டு ரசிக்கும் குரூர குணத்தின் வெளிப்பாடுதான்.

தன்னுடைய பதவிக்கு ஆபத்து வரும்போது ஆண்களும், தன்னுடைய அதிகாரத்துக்கு இடையூறு வரும்போது பெண்களும் இத்தகைய செயல்களில் துணிந்து இறங்குகிறார்கள். எதிராளியை தோற்கடிப்பதற்கு வஞ்சம், சூழ்ச்சி என்று எத்தகைய எல்லைக்கும் செல்கிறார்கள். 50 ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் வீட்டுக்கு வீடு மாமியார், மருமகள் சண்டை அதிகம் நடந்தன. ஸ்டவ் வெடித்து மருமகள் மட்டும் தீயில் சிக்கி மரணத்தைத் தழுவினாள். நிறைய மருமகள் தூக்குப் போட்டுத் தொங்கினாள். வீட்டுக்கு சம்பளம் வாங்காத வேலைக்காரியாக இருப்பதற்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டாள். எதிர்த்து கேள்வி கேட்கும் மருமகளை மாமியார் மட்டுமின்றி கணவனும் அடித்து விரட்டுவது சகஜமாக இருந்தது.



கணவன், பிள்ளைகளிடம் அன்பு காட்டும் ஒரு பெண்ணால் எப்படி இன்னொரு பெண்ணை கொடுமைப்படுத்த முடிகிறது என்று கேள்விக்கான உளவியல் பதில் மிகவும் சிம்பிள். அன்பு மீது சந்தேகம் வருவதுதான் காரணம். மகன் மீது தனக்கிருக்கும் அன்பையும் உரிமையையும் உறுதிப்படுத்த நினைக்கிறாள் தாய். தன்னைவிட தன் மகனை வேறு யாராலும் நன்றாக கவனித்துக்கொள்ள முடியாது என்று நினைக்கிறாள். அதோடு தனது குடும்பத்தலைவி எனும் அந்தஸ்த்துக்கு ஆபத்து வரப்போகிறது என்ற அச்சமும் வந்துவிடுகிறது. அதனாலே மருமகள் காலையில் ஐந்து நிமிடம் தாமதமாக எழுந்தால்.... எல்லாமே கெட்டுப்போனது போல் பிரச்னையை உருவாக்குகிறாள்.

மருமகளாக அவர்கள் அனுபவித்த துன்பங்கள், வேதனைகளை திருப்பிக் கொடுத்து பழி வாங்குகிறார்கள் என்றும் சொல்லலாம். மருமகளை ஆரம்பத்திலேயே இப்படி கொடுமைப்படுத்தி தன்னுடைய அடிமையாக மாற்றிக்கொள்வதுதான் சரி என்ற எண்ணம் அவர்களுடைய ஆழ்மனதில் பதிந்து இருப்பதால், அதை அழுத்தமாக

### மந்திரச்சொல்

“யாரும் கவனிக்காத நேரங்களில் பிள்ளைகள் அழுவதில்லை.”



www.gyanaguru.com

ஞானகுரு
மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ் 2 - 12

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**
ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586, 72997 53999, 98844 53014
**இ.மெயில் :** skmnila1@gmail.com
**இணையதளம் :** gyanaguru.com

www.gyanaguru.com

செயல்படுத்துகிறாள்.

பெண்ணின் குரூர புத்தியும் சேட்டையும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போவதில் ஆண்களுக்கும் நிறைய பங்கு இருக்கிறது. பொதுவாக மாமியாருக்கும் மருமகளுக்குமான சண்டையில் ஆண்கள் தலையிடாமல் ஓரத்தில் நின்று வேடிக்கை மட்டுமே பார்க்கிறார்கள். இரண்டு ஆட்டுக்கு நடக்கும் சண்டையை ரசிக்கும் ஓநாய் போன்று குரூர மனப்பான்மையில் சண்டையை ரசிக்கிறார்கள். இதன் அர்த்தம் அவர்கள் நடுநிலை வகிக்கிறார்கள் என்பதல்ல, இருவரும் துன்பப்படுவதைக் கண்டு ரசிக்கிறார்கள். என்ன பிரச்னை நடந்தாலும், இரண்டு பேரும் தன்னை மகிழ்விப்பதில் குறை வைக்கப்போவதில்லை என்ற நம்பிக்கையும் இருப்பதால் அந்த சண்டையை விரும்பாதவர்கள் போன்று நடித்துக்கொண்டே ரசிக்கிறார்கள்.

திருமணம் முடித்த இரண்டாவது மாதத்தில் மருமகள் கர்ப்பமடையவில்லை என்றால், ‘உங்க வீட்டுப் பக்கம் யாருக்காச்சும் குழந்தை பிறக்காம இருக்குதா… எங்க வீட்டுப் பக்கம் எல்லோரும் இரண்டாம் மாதத்திலே வயித்தை தூக்கிட்டு நிப்பாளுங்க…’ என்று சிரித்தபடி மருமகள் நெஞ்சுக்குள் ஊசி ஏற்றுவாள். இந்த கேள்வி மருமகளுக்கு மாபெரும் குற்றவுணர்ச்சியைத் தூண்டிவிடும். ஒருவேளை குழந்தை உருவாகாததற்கு தன்னுடைய உடல் காரணமோ… தன்னால் குழந்தை பெற்றுக்கொடுக்க முடியுமா என்றெல்லாம் அவளுக்குள் சந்தேகப் பேய் ஆடத்தொடங்கிவிடும். அதன்பிறகு அவளால் நிச்சயம் நிம்மதியாக இருக்கவே முடியாது. ஏனென்றால் இதே கேள்வியை குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களும் கடைசியாக கணவனும் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். இந்த கேள்வியை எதிர்த்து போராடவும் முடியாமல், போர்க்களத்தில் ஆயுதம் இல்லாத சிப்பாய் போன்ற அவஸ்தையை அனுபவிக்கிறாள்.

ஒருவேளை முதல் மாதமே மருமகள் கர்ப்பம் அடைந்துவிட்டாலும் மாமியார் வேறு வகையிலான ஆயுதம் வீசுவாள். ‘தலைச்சன் ஆம்பிள்ளைப் பிள்ளையாப் பிறக்கிறதுதான் நம்ம குடும்பத்துக்கு நல்லது… சாமியை வேண்டிக்கோ… மாத்திப் பிறந்துடப்போகுது…’ என்று புது வகையில் தாக்குதல் நடத்துவாள். ’நல்ல நேரத்துல பிள்ளை பொறக்கணும்…’, ‘சிசேரியன்னு போயிடாத, சுகப்பிரசவமா நடக்கணும்’ என்றெல்லாம் தினமும் ஒன்று சொல்லி கர்ப்பவதிக்கு திகிலூட்டிக்கொண்டே இருப்பாள்.

எதிரியின் பலவீனத்தை அறிந்து, தொடர்ந்து தாக்குதல் தொடுக்கும் கலையை எப்படியோ எல்லா மாமியார்களும் மிக எளிதாக கற்றுக்கொள்கிறார்கள். இவற்றை எதிர்கொள்ள இயலாமல் தவிக்கும் புதுப்பெண்ணிற்கு கணவன் பக்கபலமாக நிற்பதில்லை. அதற்குப் பதிலாக, ’அம்மா இப்ப என்ன கேட்டுட்டாங்கன்னு கோள் மூட்ற’ என்று கோபமாவான். ஒருபோதும் பெண்ணின் இடத்திலிருந்து இந்த கேள்வியை ஆண் பார்ப்பதே இல்லை. ஆகவே, இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மருமகள் மீது ஒட்டுமொத்த குடும்பமும் கோபத்தைக் கொட்டுகிறது. அந்த கோபமே முன்பு ஸ்டவ் வெடிப்பதற்கும், மருமகள் மரணத்திற்கும் காரணமாக இருந்தது.

நல்லவேளையாக, ஐ.டி. துறையும் செல்போன் புரட்சியும் இந்த நிலையை மாற்றிவிட்டன. அப்பாவின், அம்மாவின் கையில் இருந்த குடும்ப அதிகாரம் இப்போது அதிகம் சம்பாதிக்கும் பிள்ளைகளின் கைக்கு மாறிவிட்டது. அதோடு பெண்களும் சம்பாதிக்கத் தொடங்கிவிட்டார்கள். பொருளாதார சுதந்திரம் தனி மனித சுதந்திரத்திற்கும் காரணமாகிவிட்டது. பெண்களின் புத்திசாலித்தனத்தால் தனிக்குடித்தனம் பெருகி மாமியார்களின் ராஜ்ஜியம் சரிந்துவிட்டது.

அதுசரி, இந்த மாமியார்களை ஆழ்மனதின் மூலம் மாற்ற முடியாதா? மாமியாராக இருக்கும் பெண்களின் ஆழ்மனதிலே இப்படிப்பட்ட குரூர மனப்பான்மை இருப்பதாலும், அதனை அவர்கள் விரும்பியே செய்வதாலும், அவர்களால் சட்டென மாற





“ஒருவேளை முதல் மாதமே மருமகள் கர்ப்பம் அடைந்துவிட்டாலும் மாமியார் வேறு வகையிலான ஆயுதம் வீசுவாள். ‘தலைச்சன் ஆம்பிள்ளைப் பிள்ளையாப் பிறக்கிறதுதான் நம்ம குடும்பத்துக்கு நல்லது… சாமியை வேண்டிக்கோ… மாத்திப் பிறந்துடப்போகுது…’ என்று புது வகையில் தாக்குதல் நடத்துவாள்.”

இயலாது. ஆனால், திறமையான ஒரு மருமகளால் நிச்சயமாக இதனை மாற்றிவிட முடியும்.

எல்லோருக்கும் நல்லவராக இருக்கும் மாமியார் தன்னிடம் மட்டும் ஏன் இப்படி நடக்கிறார்… மாமியாருக்கு கோபம் வருவதற்கு என்னவெல்லாம் காரணங்கள் இருக்கின்றன, மாமியாருக்கு என்னவெல்லாம் பிடிக்கும், மாமியார் அடுத்து என்ன செய்வார் என்றெல்லாம் யோசித்து, அவற்றை மாற்றுவதற்கான முயற்சியை மருமகள் மேற்கொள்ள வேண்டும். பைக் ரேஸில் கலந்துகொள்பவர்கள் போதிய பாதுகாப்பு கவசங்களுடன் போட்டியில் பங்கேற்பதால், விபத்து நேர்ந்தாலும் மிகப்பெரிய ஆபத்து விளைவதில்லை. அத்தகைய பாதுகாப்பு கவசங்களை மருமகள் தனக்குத்தானே உருவாக்கிக்கொண்டால், மாமியாருடன் போரில் எளிதாக வென்றுவிட முடியும். ஆனால், இன்றைய மருமகள்களுக்கு இதற்கு ஆசையும் பொறுமையும் இல்லை. மாமியார் மனதை மாற்றுவதைவிட, அந்த பிரச்னையிடம் இருந்து தப்புவதே நல்லது என்று தனிக்குடித்தனம் போகிறார்கள். அங்கே மாமியாருக்குப் பதிலாக கணவருடன் போராடுகிறார்கள்.

ஏன் குடும்பம் என்றால் போராட்டமாக இருக்கிறது..? வீட்டுக்கு வீடு வாசல்படி என்பது போல் குடும்பம் என்றால் சண்டை இருக்கத்தான் செய்யும், சண்டை நடந்தால்தான் அது குடும்பம் என்றெல்லாம் காலம்காலமாக ஆணும் பெண்ணும் கேட்டுத்தான் வளர்கிறார்கள். இதை மந்திரம் போன்று மனதுக்குள் பதித்துக்கொள்கிறார்கள். அதனால், எந்த ஒரு விஷயம் என்றாலும் கணவனும் மனைவியும் சண்டை போடுவதில் தப்பு இல்லை என்று நினைக்கிறார்கள்.

இந்த சிந்தனையே தவறு. குடும்பம் என்றாலே சண்டை வருவது சகஜம் என்று எண்ணுவதற்கு அவசியமே இல்லை. ஆணும் பெண்ணும் அன்புடன் சேர்ந்து வாழ்வதற்குத்தான் குடும்பம் எனும் அமைப்பு உருவாக்கப்படுகிறதே தவிர, சண்டை போடுவதற்கு அல்ல. கருத்து வேறுபாடுகள் வரும்போது, அதனை இயல்பாக பேசி சரிசெய்துகொள்ள முடியும். ஒரு நிறுவன செயல்பாட்டில் கருத்துவேறுபாடு வரும்போது யாரும் சண்டை போடுவதில்லை. எது சரியென ஆய்வுசெய்து அதை ஏற்றுக்கொள்கிறார்கள். அப்படித்தான் குடும்பமும் இயங்கவேண்டும். யார் சொல்வது குடும்பத்தின் நன்மைக்கு சரியாக இருக்கும் என்று அவர்களுக்குள் மீண்டும் மீண்டும் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டும். சண்டை போடாமலும் குடும்பம் நடத்த முடியும், நடத்த வேண்டும் என்றுதான் பெரியோர்கள் பிள்ளைகளுக்கு சொல்லித்தர வேண்டும். சண்டை இல்லாமல் வாழமுடியும் என்பது ஆழ்மனதில் பதியும்போதுதான், அவர்களால் அப்படியொரு வழியில் பயணிக்க இயலும். அப்போதுதான் குடும்பம் ஆனந்தமான பயணமாக அமையும்.

அடுத்த விஷயத்துக்கு வரலாம். ஆழ்மனதின் ஆற்றலே மனிதரின் ஆயுட்காலத்தை முடிவு செய்வதாக சொல்லப்படுகிறது. ஒரு குடும்பத்தில் தாத்தா, அப்பா, மகன் ஆகியோர் வரிசையும் பாட்டி, அம்மா, மகள் ஆகியோர் வரிசையும் இயற்கையான வழியில் மரணமடையும் வயதை கணக்கிட்டுப் பார்த்தால் கிட்டத்தட்ட ஒரே அளவில் இருப்பதைக் காணமுடியும். இப்படி சீராக மரணத்தை நிர்ணயம் செய்வது உடல் கடிகாரம் என்கிறது உளவியல்.

அதென்ன உடல் கடிகாரம், இது எப்படி ஒருவரது மரணத்தை முடிவு செய்கிறது..?

**- அடுத்த இதழில்**

www.gyanaguru.com

# ரூமி எனும் அமிர்தம்



**சீடர் :** விஷம்?

**ரூமி :** நம் தேவைக்கு அதிகமாக இருப்பது எதுவோ அதுதான் விஷம். அது அதிகாரமாக, செல்வமாக, அன்பு, வெறுப்பு, பசியாகவும் இருக்கலாம்.

**சீடர் :** பயம் ?

**ரூமி :** நிச்சயமின்மையை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது பயம். நிச்சயமின்மையை ஏற்றுக்கொள்ளும் போது அது சாகசம் ஆகிவிடும்

**சீடர் :** பொறாமை ?

**ரூமி :** மற்றவர்களிடம் இருக்கும் நல்லவற்றை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதே பொறாமை. அப்படி ஏற்றுக்கொள்ளும் போது அவர் உனக்கு உத்வேகம் தரக்கூடியவராக மாறிவிடுகிறார்

**சீடர் :** கோபம் ?

**ரூமி :** நம் கட்டுப்பாட்டை மீறிச் செல்வதை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது கோபம். அப்படி ஏற்றுக்கொள்ளும்போது அது சகிப்புத்தன்மை ஆகிவிடுகிறது

**சீடர் :** வெறுப்பு ?

**ரூமி :** இன்னொரு மனிதனை ஏற்றுக் கொள்ளாமல் நிராகரிப்பது வெறுப்பு. நிபந்தனைகள் இன்றி ஏற்றுக்கொள்ளும்போது அது அன்பாகிவிடுகிறது.







திருமண உறவு
சிக்கல்கள் தீர்வு மையம்




திருமணத்திற்கு முன்...
திருமணத்திற்கு பின்...
சிறப்பு ஆலோசனைகள்

தொடர்புக்கு
GG Relationship Counseling
Madurai, Viruthunagar +91 80725 89355














RAJAN
Dental



Regain your confident smile with Full mouth Dental Implants at

Rajan Dental

# எல்லோருக்கும் நிரந்தரப் பற்கள் சாத்தியமா..?

பல்வேறு காரணங்களால் அனைத்து பற்களையும் இழந்தவர்களுக்கு நிரந்தர பற்கள் பொருத்தி சாதனை படைத்திருக்கிறார்கள், 60 ஆண்டுகள் பாரம்பர்யம் கொண்ட சென்னை மயிலாப்பூர் ராஜன் பல் மருத்துவமனை மருத்துவர்கள். இதுகுறித்து சீனியர் மருத்துவ நிபுணர்களிடம் பேசினோம்.

### ஸைகோமா ஆல்-ஆன்-4 சிகிச்சை

இந்த படங்களில் உள்ளவர்கள் அனைத்து பற்களையும் இழந்து எங்களிடம் நிரந்தர பற்கள் பொருத்தி கொண்டவர்கள். எங்களுக்குத் தெரிந்தவரை படத்தில் உள்ள 5 வயது குழந்தை தான், ஆசியாவிலேயே முதல் டென்டல் இம்பிளான்ட் பொருத்திய குழந்தை. அதே போல நாங்கள் 85 வயது நிரம்பிய முதியவருக்கும் நிரந்தர பற்கள் பொருத்தி உள்ளோம்.

முதுமையால், ஈறு நோய்களால், விபத்தால், கருப்பு பூஞ்சையால் (COVID), பிறவி குறைபாடுகளால் பற்களையும் தாடை எலும்பையும் இழந்தவர்களுக்கு இன்று உலகம் முழுவதும் நவீன ஸைகோமா ஆல் ஆன் 4 சிகிச்சைதான் (Zygoma All-on-4) சிகிச்சையே மேற்கொள்ளப்படுகிறது. இதனை கடந்த 30 ஆண்டு காலமாக ராஜன் பல் மருத்துவமனையில் ஓரல் டிஜிட்டல் ஸ்கேன், 3D பிரின்டட் ஸ்டென்ட்ஸ், கோன் பீம் சிடி ஸ்கேன் துணையுடன் கம்ப்யூட்டர் முறையில் ஆய்வு மேற்கொண்டு, நான்கே நாட்களில் நிரந்தர செயற்கை பற்கள் பொருத்துகிறோம்.

நாங்கள் பொருத்தும் செயற்கை பற்கள் அக்ரலிக், செராமிக்கால் தயாரிக்கப்படுவதால், 10 ஆண்டுகள் முதல் 30 ஆண்டுகள் வரை நீடித்து உழைக்கும். இதனால் மாறாத முகவடிவம், திருப்தியான உணவுப் பழக்கம், தெளிவான பேச்சு மற்றும் தன்னம்பிக்கையும் கிடைக்கும். இயற்கை பற்கள் போன்று உணவை நன்றாக மென்று சாப்பிடலாம் என்பதால் ஜீரணிக்கும் தன்மை அதிகரித்து நோய் பாதிப்பும் குறையும். மேலும், இந்த சிகிச்சையால் ஈறு தொற்று நோய் மற்றும் சர்க்கரை நோயும் கட்டுப்படுவது போனஸ் நன்மை" என்றனர்.

### பற்கள் சீரமைப்பு

தொடர்ந்து பேசிய மருத்துவர்கள், "ஒருவரது புன்னகையை அழகாக்குவது சீரான பல்வரிசை தான். ஆனால், எல்லோருக்கும் அப்படி இயற்கையில் அமைந்து விடுவதில்லை. தெற்றுப்பல், எத்துப்பல், கோணல் வரிசை, ஒன்றன் மீது ஒன்று வளர்ந்திருப்பது, மேல் மற்றும் கீழ் பற்கள் சீரற்று அமைந்திருப்பது போன்றவை உண்பதற்கு இடையூறாக இருப்பதுடன் தன்னம்பிக்கையையும் குலைத்துவிடும். ஆனால், இப்போது இந்த அனைத்து குறைகளும், அலைன்மென்ட் டெக்னாலஜி மூலம் எளிதாகவும், முழுமையாகவும் எங்களால் சீர் செய்யப்படுகின்றன.

பற்கள் சீரமைப்பு மட்டுமின்றி தாடை சீரமைப்பு, நாடி சீரமைப்பு, தாடை சீரமைப்பு, இருக்கும் பற்களை டேமேஜ் செய்யாமல் அழகு படுத்துதல், ஈறுகளின் அளவை குறைத்து புன்னகையை சரி செய்தல், கம்பிகள் மூலம் பற்களின் ஒழுங்கின்மையை சரி செய்தல் போன்ற அனைத்து சிறப்பு சிகிச்சைகளும் நாங்கள் மேற்கொள்கிறோம்.

### காணொளி ஆலோசனை

வெளி ஊர்களில் உள்ளவர்கள் மொபைல் போன் வாட்ஸ்-ஆப் வீடியோ கால் மூலம் எங்கள் மருத்துவர்களை தொடர்பு கொண்டு முதல் கட்ட ஆலோசனை பெற நாங்கள் வசதி செய்கிறோம். மேலும் தொடர்புக்கு...

**ராஜன் பல் மருத்துவமனை,**

எண்.56, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை,
மைலாப்பூர், சென்னை-600004. தொலைபேசி-
044 40105050, அலைபேசி: +91 9789001100,
www.rajandental.com.